விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 07 வியாழக்கிழமை (23.09.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 278

வல்வெட்டித்துறை

## நகர சபையை இழந்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

6 ஆம் பக்கம் பார்க்க

## லொஹான் குறித்து விசாரிக்க விசாரணைக்குழு நியமனம்

பாராளுமன்றில் நீதி அமைச்சர்அலி சப்ரி

7 ஆம் பக்கம் பார்க்க

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக

## அரசாங்கம் எதனையும் மறைக்கவில்லை - டலஸ்

3 ஆம் பக்கம் பார்க்க

# கெரவலப்பிட்டிய மின் நிலையம்

இணக்கப்பாடு ஏற்படவில்லையென அரசாங்கம் தெரிவிப்பு

40 வீத பங்குக் கொள்வனவுக்கு உடன்படிக்கை என அமெரிக்க நிறுவனம் அறிவிப்பு

(15ஆம் பக்கம் பார்க்க)

இன, மத, பாலின வேறுபாடுகளின்றி

# அடிப்படைப் பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை

## ஐ.நா சபையில் ஜனாதிபதி கோட்டாபய

*(நியூ யோர்க்)*

இன, மத, பாலின வேறுபாடுகளின்றி நாட்டின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ஐ.நா பொதுச்சபையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)



## நுகர்வோர் பாதுகாப்பு சட்டம்

சபையில் நிறைவேற்றம்

(கொழும்பு)

நுகர்வோர் பாது காப்பு அதிகார சபை 15

நாட்டில் மேலும்

# 92 பேர் மரணம்

(கொழும்பு)

நாட்டில் மேலும் 92 கோவிட்-19 மரணங் 15

## லொஹான் ரத்வத்த கைது செய்யப்பட்டு நீதியான விசாரணை இடம்பெறுமா?

பாராளுமன்றில் பிரேரணையை முன்வைத்து உரையாற்றும்போது கஜேந்திரகுமார் கேள்வி

(கொழும்பு)

லொஹான் ரத்வத்தவின் செயற்பாடு குறித்தும் மீறப்பட்ட சட்டங்களின் அடிப்படையிலும் அவரைக் கைது செய்யவும் பொருத்தமான சட்டநடவடிக்கை களை எடுக்கவும் சட்டமா அதி பரிற்கு எந்தவொரு புற அழுத்த மும் வழங்கபடாது இருப்பதை இந்த அரசாங்கம் உறுதிப்படுத் துமா? என பாராளு மன்ற உறுப்பினர் 15

## ஒக்.7 யாழ்.பல்கலை பொதுப் பட்டமளிப்பு

நிகழ்நிலையில் நடத்த மாணவர்கள் இணக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 35ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டா வது பகுதி அறிவிக்கப் பட்டபடி எதிர்வரும் ஒக் 15

## யாழில் உயிரிழந்த 2 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உயிரிழந்த 64, 75 15

## யாழில் தடுப்பூசி பெறுவதில் கர்ப்பவதிகளுக்கு ஆர்வமில்லை

வடக்கு சுகாதாரப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இன்னமும் கணிசமான கர்ப்பவதித் தாய் மார்கள் மத்தியில் கோவிட்-19 தடுப்பூசிக்கு வரவேற்பு குறை வாகக் காணப்படுகின்றது.

தடுப்பூசியானது ஏனையவர் களைப் போலவே கர்ப்பவதி களை கோவிட் - 19 தொற்றி லிருந்து பாதுகாப்பதுடன் தொற்றி னால் ஏற்படும் பாதிப் புக்களையும் மிகக் 15

## சர்வதேச ஒத்துழைப்பு இலங்கைக்கு வேண்டும்

ஐ.நா பொதுச்சபையில் ஜனாதிபதி

(நியூயோர்க்)

கோவிட் தொற்றினால் நாடு மாத்திரமல்ல எமது பொருளா தாரமும் முடங்கிப்போயுள்ளது. சர்வதேச ஒத்துழைப்புகள் இலங் கைக்கு கிடைக்கப்பெறவேண் டும் என ஐ.நா பொதுச்சபை கூட் டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வேண்டு கோள் விடுத்தார். 15

# 1,321 பேருக்கு தொற்று

(கொழும்பு)

கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 1,321 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 508,651 ஆக அதிகரித்துள்ளது. (ம)

# வவுனியாவில் 33 பேர் உட்பட வடக்கில் 62 பேருக்கு கொரோனா தொற்று

(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்டத்தில் 33 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 62 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது. யாழ்.போதனா வைத்திய சாலை, யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூட முடிவுகளின் அடிப்படையில் குறித்த தொற் றாளர்கள் அடையாளம் காணப்பட்டு ள்ளனர்.

அவற்றின் அடிப்படையில், யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூட முடிவுகளின்படி யாழ்.மாவட்டத்தில் 24 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் இரு வரும் வவுனியா மாவட்டத்தில் 08 பேரும் மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் இருவரும் முல்லைத்தீவு மாவட்ட வைத் திய சாலையில் ஒருவரும் யாழ். பல்க லைக்கழக ஆய்வுகூட முடிவுகளின்படி வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 25 பேரும் தொற்றுக்குள்ளா கியுள்ளனர். (ம)

## கண்ணீர் அஞ்சலி



எமது நிலையத்தின் நீண்டகால உறுப்பினர்
கலாநிதி க.ஸ்ரீகருணாகரன்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி
**தங்கம்மா கந்தையா**
(தங்கேஸ்வரி – இளைப்பாறிய ஆசிரியை)

அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**இணுவில் சிவகாமசுந்தரி சனசமூக நிலையத்தினர்**

## கண்ணீர் அஞ்சலி

எமது நிலையத்தின் நீண்டகால
உறுப்பினர் க.யோகராசா
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி பொன்னம்மா கனகசபை**



அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**இணுவில் சிவகாமசுந்தரி சனசமூக நிலையத்தினர்**

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு : 11.12.1940
இறப்பு : 20.09.2021

அமரர்
**Eng. கிட்ணசாமி சண்முகசுந்தரம்**
( இளைப்பாறிய பிரதிப் பணிப்பாளர் – நீர்ப்பாசனத் திணைக்களம், கொழும்பு )

அன்னார் கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் ஆயுட்கால அங்கத்தவரும் ஆலயத்தின் முன்னேற்றத் திற்கு வழிகாட்டியாகச் செயற்பட்டவரும் நாளாந்த வழிபாட்டில் கிரமமாகப் பங்கு கொள்ளும் அடியவரும் ஆவார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாக சபை,
கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்,
கொக்குவில்.

ஓம் விராட் விஸ்வ பிரமணே நமஹ

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை மடியில்
31.07.1948

ஆண்டவன் அடியில்
24.08.2021

அமரர்
**பத்மாவதி வில்வராஜா**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று வானுறையும் தெய்வமாகி விட்ட
எங்கள் அன்புத் தாயே!
மாதம் ஒன்று ஆகிவிட்டாலும்
என்றும் உங்கள் நினைவுடனும்
இவ்வுலகில் நாம் வாழ்வதற்கு தெய்வமாக இருந்து
வழிகாட்டுவீர்கள் என்ற நம்பிக்கையுடனும்
தங்கள் ஆத்ம சாந்திக்காக எமது கண்ணீர்ப்பூக்களை
காணிக்கையாக்குகின்றோம்.

கடந்த 24.08.2021 அன்று எமது அன்னையை இழந்து நின்றவேளை எமது துயரத்தில் நேரில் பங்குகொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் பல்வேறு வழிகளில் உதவிய அனைத்து அன்பு உறவுகளுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல. 06,
செல்லர் வீதி, நல்லூர்.
(7968)
குடும்பத்தினர்

## ஈராண்டு சென்றதுவோ எங்கள் தாயே!



அன்னை மடியில்
11
01
1948

ஆண்டவன் அடியில்
23
09
2019

அமரர்
**திருமதி பரமேஸ்வரி பரராஜசிங்கம்**

திதி : புரட்டாதி அபர பக்க தசமி (01.10.2021)

சித்தமதில் சிவநாமம் தெளிந்த பார்வை
சீருடனே நீறிலங்க அமைதி ஓங்க
எத்தகைய நிலையுறினும் இடர் உற்றாலும்
எல்லாமே ஆதியென வலிமை பொங்க
உத்தமியாய் எல்லோர்க்கும் வழியைக் காட்டி
உயர்வுகள் பலசேர உரமாய் நின்ற
வித்தகித்தாய் வையநீங்கி ஆண்டு இரண்டோ
விநாயகன்பொற் திருத்தாளில் இனிது வாழ்வாய்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"கலைக்கோயில்"
சின்னத்தாய், புலோலி தெற்கு.
(7975)
குடும்பத்தினர்

# ஜனாதிபதியுடன் பேசத் தயார்

## உலகத் தமிழர் பேரவை தெரிவிப்பு

(கொழும்பு)

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அழைப்பை ஏற்று, தீர்வுக்கான முயற்சிகளில் அவருடன் தொடர்புகளைப் பேண தயாராக இருப்பதாக புலம்பெயர் தமிழர் அமைப்பான உலகத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.**

ஜனாதிபதிகோட்டாபய ராஜபக்ஷ கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸை நியூயோர்க்கில் சந்தித்துப் பேசினார். இதன் போது இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சனைகளை உள்ளக பொறிமுறை மூலம் தீர்க்கப்பட வேண்டும் எனக் கருத்து வெளியிட்டார்.

அத்துடன், இது தொடர்பில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுடன் கலந்துரையாடத் தயாராக உள்ளதாகவும்தெரிவித்தார்.

இந்நிலையிலேயே தமிழ் புலம்பெயர் மக்களுடன் இணைந்து செயற்படத் தயராக உள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளமை நிச்சயமாக ஒரு முற்போக்கான நடவடிக்கை. அதை நாங்கள் வரவேற்கிறோம் என உலகத் தமிழர் பேரவை செய்தித் தொடர்பாளர் சுரேன் சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஆறு மாதங்களுக்கு முன்பு, மார்ச் 2021 இல் உலகத் தமிழர்பேரவை உள்ளிட்ட பல முக்கிய புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுக்கு தடை விதித்து இலங்கை அரசாங்கம் வர்த்தமானி வெளியிட்டது. இந்நிலையில் ஜனாதிபதியின் இந்த திடீர் மனமாற்றம் எவ்வாறு ஏற்பட்டது? எனவும் அவர் கேள்விஎழுப்பினார்.

இந்த அரச நிர்வாகத்தின் தவறான ஆலோசனையால் எங்களை தடைசெய்ததற்காக இலங்கை மக்களுடனான அதன் ஈடுபாடுகளை உலகத் தமிழர் பேரவை நிறுத்தவில்லை. சமீபத்தில் கூட, கோவிட் 19 தொற்றுநோய்க்கு எதிரான போராட்டத்தில் உதவும் வகையில் பல மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள மருத்துவ உபகரணங்களை நாங்கள் ஏற்பாடு செய்தோம். நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கில் மட்டுமல்ல, முழு இலங்கைக்கும் இவ்வாறான உதவிகளைச் செய்தோம்.

எங்கள் மக்களின் பிரச்சினைகளை மட்டுமன்றி இலங்கையின் அனைத்து மக்களின் குறைகளையும் தீர்க்க தயாராக இருந்தால் நாங்கள் யாருடனும் பேசத் தயாராக இருக்கிறோம் எனவும் உலகத் தமிழர் பேரவை செய்தித்தொடர்பாளர் மேலும் தெரிவித்தார். ஜனாதிபதிபேச விரும்பும் உள்நாட்டு பொறி முறையைப் பொறுத்தவரை நீதித்துறை சாராத செயல்முறைகள் மற்றும் வழி முறைகள் குறித்து விவாதிப்பது மகிழ்ச்சியளிக்கும்.

ஆனால் நீதித்துறை சார் பொறிமுறைகளைப் பொறுத்த வரையான செயற்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டும்? என்பதை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை 30/1 தீமானம் விவரிக்கிறது எனவும்அவர்குறிப்பிட்டார்.(நி-5)

# காணாமற்போனவர்கள் தொடர்பாக எதனையும் மறைப்பதற்கில்லை

## அமைச்சர் டலஸ்

(கொழும்பு)

காணாமற்போனவர்கள் தொடர்பாக எதனையும் மறைப்பதற்கில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது. இதுதொடர்பாக ஒன்றிணைந்த செயற்பாடுகளே அவசியம் என்றும் இலங்கையர் என்ற ரீதியில் இவ்வாறான துர்ப்பாக்கிய சம்பவம் மீண்டும் ஏற்படாத வகையில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவதே இறுதியான பதிலாகும் என்று அமைச்சரவை பேச்சாளரும் வெகுஜன ஊடக அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றஅமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போது, இவ்வாறு தெரிவித்தார்.தமது பிள்ளைகள் காணாமற்போயிருப்பதாக பெற்றோர் கண்ணீர் விடும் காட்சியை ஒவ்வொரு வருடமும் நாம் காண்கின்றோம். இவர்கள் அனைவரும் இலங்கை பிரஜைகள். அதனால், நாம் இதுதொடர்பில் பொறுப்புடன் செயற்பட வேண்டியுள்ளது.

அதனால் அதில் எதனையும் மறைப்பதற்கில்லை. இதுதொடர்பில் ஒன்றிணைந்த செயற்பாடுகளே அவசியம். இலங்கையர் என்றரீதியில் இவ்வாறான துர்பாக்கிய சம்பவம் மீண்டும் ஏற்படாத வகையில் செயற்படுவதே இறுதியான பதிலாகும்" என்று அமைச்சர் தெரிவித்தார். (நி-5)

# மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனங்கள் மடக்கிப்பிடிப்பு

(குருமன்காடு)

முறையான போக்குவரத்து அனுமதிப் பத்திரமின்றிமணல் ஏற்றிச் சென்ற 4 டிப்பர் வாகனங்கள் வவுனியா வனத்துறைஅதிகாரிகளால் பிடிக்கப்பட்டுள்ளன. நேற்று இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வவுனியா, ஏ9 வீதியின் ஊடாக நகரப்பகுதியில் மணல் ஏற்றிச்சென்ற டிப்பர் வாகனங்கள் வவுனியா வனத்துறை அதிகாரிகளால் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது 4 டிப்பர் வாகனங்கள் முறையான வழிஅனுமதிப்பத்திர மின்றி மணல் ஏற்றிச் சென்றமை கண்டு பிடிக்கப்பட்டது.

இதனையடுத்து, குறித்த 4 டிப்பர் வாகனங்களும் வனத்துறை அதிகாரிகளால் கையகப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதன் சாரதிகள் 4 பேரும் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளின் பின் குறித்த நான்கு பேரையும் வவுனியா நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (7-4-6-250)


கண்ணீர் அஞ்சலி



எமது நண்பி

செ.வைதேகியின் அன்புத் தந்தை

மார்க்கண்டு

சோமேஸ்வரானந்தம்

(C-2682)

21.09.2021 அன்று

இறைபதமடைந்ததையிட்டு

அவரின் குடும்பத்தினருக்கு

அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய

இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆசிரியர், ஆருயிர் நண்பிகள்


# உள்நாட்டு பால்மாவின் விலையையும் அதிகரிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

உள்நாட்டு பால்மாவின் விலையையும் அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேசிய பால் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இறக்குமதிசெய்யப்படும் பால்மாவின் விலை அதிகரிப்புக்கு ஏற்ப, இந்த அதிகரிப்பை முன்னெடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.தேநீர் தயாரிப்பதற்காக பால்மாவை பயன்படுத்துவதை விட பசும்பாலை பயன்படுத்துவது வாடிக்கையாளர்களுக்கு இலாபகரமானது என மில்கோ சங்கத்தின் தலைவர் லசந்த விக்ரமசிங்க தெரிவித்தார்.

அத்துடன், பசும்பாலை உபயோகப்படுத்துவது தற்போது காணப்படும் பால்மா பற்றாக் குறைக்கு தீர்வாக அமையும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (நி-5)


கண்ணீர் அஞ்சலி



அமரர்.மு.அருளையா (அதிபர்)

-மல்லாகம்-

பாடசாலையில் தலைமை ஆசானாய்

மல்லாகம் கோணப்புலம் வைரவர் ஆலய செயல் வீரனாய்

வட இலங்கை சங்கீத சபை நாயகனாய்

மல்லாகத்திற்கே தலைவராய்

எல்லோருக்கும் நல் மனிதராய்

வாழ்ந்தீர்கள் ஐயா அருள் ஐயா

உங்கள் ஆத்மா சாந்தியடைய சிவனைப் பிரார்த்திக்கின்றோம்

பிரபல சாத்துப்படி, பூஞ்சப்பறு, பூந்தண்டிகை, மணப்பந்தல் மணவறை அலங்காரன், மாவிட்டபுரம் செ. கந்தையாவின் பிள்ளைகள் குகதாசன், வரதாசன், சண்முகவடிவு, தில்லைமணி, சத்தியதாசன், சபேசன், இராகினி

(71450)

## இறுதி ஓவரில் இரண்டு ஓட்டங்களால்

# பஞ்சாப்பை வீழ்த்தியது ராஜஸ்தான்



பஞ்சாப் அணிக்கு எதிரான போட்டியில் ராஜஸ் தான் அணி இரண்டு ஓட்ட ங்களினால் திரில் வெற்றி பெற்றுள்ளது.

2021 ஐ.பி.எல். தொடரின் 32 ஆவது லீக் போட்டி நேற்று முன் தினம் டுபாயில் சஞ்சு சாம்சன் தலைமை யிலான ராஜஸ்தான் ரோய ல்ஸ் மற்றும் கே.எல். ராகுல் தலைமையி லான பஞ்சாப் கிங்ஸ் ஆகிய அணிகளுக்கு இடையில் ஆர ம்பமானது.

போட்டியில் நாணய சுழ ற்சியில் வெற்றிபெற்ற பஞ் சாப் கிங்ஸ் அணியானது முதலில் துடுப்பெடுத்தாடு மாறு ராஜ ஸ்தான் அணியை பணித்தது.

அதற்கிணங்க முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ் தான் வீரர்களின் தொடர்ச்சியான அதிரடி ஆட்டத்தினால் 20 ஓவர்கள் நிறைவில் 185 ஓட்டங்களை குவித்தது அந்த அணி.

ஆரம்ப வீரர்களாக கள மிற ங்கிய எவின் லூயிஸ் 21 பந்துகளில் ஒரு சிக்ஸர், 7 பவுண்டரிகள் அடங்கலாக 36 ஓட்டங்களையும், ஜெய் ஸ்வால் 36 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 6 பவுண்டரிகள் அடங்கலாக 49 ஓட்டங்களை பெற்றனர்.

அது மாத்திரமன்றி மத்தி யதர துடுப்பாட்ட வீரர்களான லியாம் லிவிங்ஸ்டோன் 17 பந்துகளில் 25 ஓட்டங்க ளையும், மஹிபால்லோ மோர் 17 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகள் அடங்கலாக 43 ஓட்டங்களை அதிரடியாக குவித் தார்.ஏனைய வீரர்கள் அனை வரும் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் ஆட்ட மிழக்க, முஸ் தாபிசூர் எதுவித ஓட்ட மின்றி ஆட்டமிழ க்காதிரு ந்தார்.

பந்து வீச்சில் பஞ்சாப் அணி சார்பில் அர்ஷ்தீப் சிங் 5 விக் கெட்டு களையும், மொஹமட் ஷமி 3 விக் கெட்டுகளையும், இஷான் போரல் மற்றும் ஹர்பிரீத் பிரார் ஆகியோர் தலா ஒவ் வொரு விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

186 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடு த்தாடிய பஞ்சாப் அணியும் அதிரடியான ஆட் டத்தினால் பதிலடி கொடு த்தது.எனினும் அவர்களால் 20 ஓவர்களின் நிறைவில் 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் 183 ஓட்டங் களை மாத்திரம் பெற முடி ந்தது. இதனால் பஞ்சாப் கிங்ஸ் வெறும் இரண்டு ஓட்டங்களி னால் தோல்வியை சந் தித்தது.

அணி சார்பில் அதிகபடியாக ராகுல் 33 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 4 பவுண் டரிகள் அடங்கலாக 49 ஓட்டங்க ளையும், மயங்க் அகர்வால் 43 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 7 பவுண்டரிகள் அடங்கலாக 67 ஓட்டங் களையும், அடன் மார்க்ரம் 26 ஓட்டங்களையும் மற்றும் நிகோலஷ் பூரண் 32 ஓட்டங்களையும் எடுத்த னர். (4-6)

# மகளிர் கிரிக்கெட்டில் 20 ஆயிரம் ரன்கள்

## மித்தாலிராஜ் சாதனை



இந்திய மகளிர் கிரிக்கெட்டில் முன்னணி வீராங்கனையாக இருப்பவர் மித்தாலிராஜ். ஆண் கள் கிரிக்கெட்டில் எப்படி ரென் டுல்கர் சாதனை படைத்திருந் தாரோ அதே போன்று பெண் கள் கிரிக்கெட்டில் அவர்பல்வேறு சாதனைகளை புரிந்துள்ளார். இந்திய மகளிர் ஒருநாள் கிரிக் கெட் அணியின் கப்டனான அவர் ஆஸ்திரே லியாவுக்கு எதி ரான நேற்று முன்தினம் நடை பெற்ற போட்டியில் 63 ரன்கள் எடுத்தார். இதன்மூலம் அவர் தனது கிரிக்கெட் வாழ்க்கையில் 20 ஆயிரம் ரன்னை எடுத்து சாதனை படைத்தார்.38 வய தான மித்தாலிராஜ்தொடர்ச்சியாக 5 போட்டிகளில் அரை சதம் விளாசி சாதித்து உள்ளார். அவர் 218 ஒருநாள் போட்டி களில் விளையாடி 7,367 ரன் கள் எடுத்து உள்ளார். இதில் 7 சதமும், 59 அரை சதமும் அடங்கும். அதிக பட்சமாக 125 ரன் குவித்து உள்ளார். (4-6)

## இன்றைய போட்டி

vivo IPL

Kolkata Knight Riders VS Mumbai Indians

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2410

**கஸ்தூரி**

என்னட்ட இருக்குற கறுப்பு பணத்துல
கொஞ்சத்த உங்களுக்கு அன்பளிப்பா தரட்டா?
கறுப்போ/வெள்ளையோ
கடனா தாங்கோ அன்பளிப்பா வேணாம்.



**விகிர்திகா**

ஹலோ சேர் இங்க ஒருத்தன் போட்டா
பைசர் தான் போடுவன்னு
ஊசி போடாம பதுங்குறான்...
அவர வந்து பிடிச்சிட்டு போக முடியுமா சேர்?



**வியாழினி**

ஒருத்தங்களோட அருமை அவங்க
இல்லாத போது தான் புரியுது...
lover ஆ மாப்ள?
lover இல்ல அங்கர் மாமா...



**கிசோர்**

விசேட உரையில என்ன வேணா சொல்லுங்க



சட்டங்கள் கடுமையாக்கப்படும் என்றத தவிர

**மதிராஜ்**

நாட்ட முடக்கச்சொல்லி நாங்க கத்துனது
என்னமோ உண்மைதான்
அதால அவர் என்ன கோவத்தில
இருந்தாரோ தெரியல்ல மாச கணக்குல
Lockdown போட்டுத் தள்ளுறாரு



**துசியந்தன்**

தடுப்பூசி கட்டாயமாக்கப்பட்டுள்ளது...தடுப்பூசி
அட்டை இல்லாமல் இனிமேல் வெளியே
வருவது சிரமம்.



அதெல்லாம் தேவையில்ல...பைசர் வருமா?
வராதா?..அத சொல்லு

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இராசிபலன்

23.09.2021
புரட்டாதி 07 , வியாழக்கிழமை
துதியை முற்பகல் 7.22 மணிவரை
ரேவதி முற்பகல் 7.59 மணிவரை
சுபநேரம் 7.32-9.02 மணிவரை
இராகுகாலம் 1.32-9.02 மணிவரை
சந்திராஷ்டமம்: உத்தரம்
சித்தாமிர்தம்

வளவன்

**மேஷம்** – தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**ரிஷபம்** – சேமிப்பில் சிறிது கரையலாம், உடல் நலனில் அக்கறை தேவை, அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**மிதுனம்** – இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்** – குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**சிம்மம்** – வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், வருங்கால நலன் கருதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பயணங்கள் இடம்பெறலாம்.

**கன்னி** – எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வாகன பழுது செலவுகள் ஏற்படலாம், சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்வார்கள்.

**துலாம்** – உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், புதிய பொருட்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்** – பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், உற்சாகமான நாள், மனக்குழப்பங்கள் அகலும், திட்டமிட்ட காரியங்கள் முன்னேற்றம் தரும்.

**தனுசு** – நெடுநாளைய விருப்பங்கள் நிறைவேறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**மகரம்** – வெளியூர்த்தொடர்புகள் அனுகூலம் தரும், பெற்றோரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம்.

**கும்பம்** – முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், வழிபாடு பெருமை சேர்க்கும்.

**மீனம்** – எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

உழைப்பில் ஈடுபடும் நேரம் எதுவும் வீணாவதில்லை

# கிராம உத்தியோகத்தர்களுக்கும் மேலதிக கொடுப்பனவுகளை வழங்குங்கள்

## சாணக்கியன் வலியுறுத்து

(கொழும்பு)

சுகாதார பரிசோதர்களுக்கு வழங்கப்படுவது போன்று கிராம உத்தியோகத்தர்களுக்கும் மேலதிக கொடுப்பனவுகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை உரையாற்றிய போதே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா சூழ்நிலையில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் சுகாதார துறையினரை சேர்ந்த அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோன்று உண்மையிலேயே பேசப்படாத ஒரு பிரிவினராக காணப்படும் கிராம உத்தியோகத்தர்கள் பற்றியும் நாங்கள் பேச வேண்டும்.

அத்துடன், சுகாதார பரிசோதர்களுக்கு வழங்கப்படுவது போன்று கிராம உத்தியோகத்தர்களுக்கும் மேலதிக கொடுப்பனவுகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நான் வலியுறுத்த விரும்புகின்றேன் என அவர் தெரிவித்தார். (நி-5)

# 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடன் வாங்கத் தயாராகும் இலங்கை

(கொழும்பு)

கொவிட்-19 மூலோபாய தயார்படுத்தல்கள் மற்றும் பதிலளிப்புகள் வேலைத்திட்டத்தின் கீழ் 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை மேலதிகக் கடனாக பெற அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

கொவிட் - 19 இற்கான தேசிய பிரயோகங்கள் மற்றும் தடுப்பூசி திட்டமிடல் போன்றவற்றை இயன்றளவு இலங்கையின் சனத்தொகையில் 60 சதவீத மானவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் அடிப்படை இலக்கை விரிவாக்குவதற்கு கொவிட் முகாமைத்துவத்திற்கான தேசிய செயலணி தீர்மானித்துள்ளது.

அதற்காக கொவிட் - 19 மூலோபாய தயார்படுத்தல்கள் மற்றும் பதிலளிப்புகள் வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கையில் கொவிட் 19 அவசர பதிலளிப்புக்கள் மற்றும் சுகாதாரத்துறையை தயார்படுத்தல் கருத்திட்டத்திற்காக 100 மில்லியன் அமெரிக்க டொலர் மேலதிகக்கடனை வழங்குவதற்கு உலக வங்கி உடன்பாடு தெரிவித்துள்ளது.

குறித்த மேலதிக தொகை, 14 மில்லியன் ஃபைசர் தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்கும், தடுப்பூசி வழங்கும் பணிக்கு ஏற்புடைய ஏனைய செலவுகளுக்குமான நிதியிடலுக்காகத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த மேலதிக நிதியிடல் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி-5)

# மரண அறிவித்தல்

## திருமதி. யசோதராதேவி தியாகராஜா

(இளைப்பாறிய அதிபர் - மானிப்பாய், இந்து மகளிர் கல்லூரி)

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 07 | | 22 |
| 05 |  | 09 |
| 1933 | | 2021 |

நல்லூரைப் பிறப்பிடமாகவும், சிட்னியை (அவுஸ்திரேலியா) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. யசோதராதேவி தியாகராஜா 22.09.2021 நேற்று சிட்னியில் இறைவனடி சேர்ந்தார்.

இவர் காலஞ் சென்ற சி. தியாகராஜா (முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர், முன்னாள் உடற்கல்விப் பணிப்பாளர் - யாழ். பல்கலைக் கழகம்) அவர்களின் அன்பு மனைவியும், ராகுலனின் (அவுஸ்திரேலியா) பாசமிகு தாயாரும், மாலினியின் அன்பு மாமியாரும், நிஷா, ஷயன் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற திரு. திருமதி நவரட்ணராஜாவின் புதல்வியும், காலஞ்சென்ற திரு. திருமதி. ராயோசாகிப் M.சின்னத்தம்பியின் மருகளும், சுபத்திரா சிவநாயகம், காலஞ்சென்ற உருத்திரா நவரட்ணராஜா, காலஞ்சென்ற சிவகுமாரன் நவரட்ணராஜா, கௌசல்யா தட்சணாமூர்த்தி, காலஞ்சென்ற ராதா ராஜரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற சிவநாயகம், காலஞ்சென்ற சகுந்தலா, அகிலாண்டநாயகி, காலஞ்சென்ற தட்சணாமூர்த்தி, காலஞ்சென்ற ராஜரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்களுக்கு அறியத் தருகின்றோம்.

கொரோனா தொற்று சார்ந்த கட்டுப்பாட்டின் காரணமாக நேரில் அஞ்சலி செலுத்துவது இயலாதென்பதையும் கனத்த இதயத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மகன்: ராகுலன் (+61 417 555 238)
மருமகள்: மாலினி (+61 434 065 062)

(7958)




# நாடு முழுவதும் வைத்தியசாலைப் பணியாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டம்

( கொழும்பு)

**நாடு முழுவதும் வைத்தியசாலைப் பணியாளர்கள் நேற்று புதன்கிழமை பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வைத்தியசாலையின் முன்றலில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

கொவிட்-19 தடுப்புச் செயற்றிட்டத்தை வலுப்படுத்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் தொழிற்சங்க குழு ஒன்றை நியமித்தல், கொவிட் உடனான போரில் முன்னரங்கில் நிற்போருக்கு போதிய கையுறைகள், முகக்கவசங்கள் தங்கு தடையின்றி வழங்க வேண்டும், கொவிட் தொற்று நிலையின் கீழ் இடையுறுகள் மத்தியில் சேவையாற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் விசேட கொடுப்பனவை வழங்கல், வைத்தியசாலை கொவிட் குழுவில் தொழிற்சங்க பிரதிநிதிகளை நியமித்தல், ஆளணிவெற்றிடங்களை உடனடியாக நிரப்பல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தேவேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

(4-7-30)

# ஆவணப்பட வெளியீடும் இணையவழி கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

தாய்நிலம் நில அபகரிப்பு - இலங்கை வாழ் தமிழ் மக்களின் உண்மையான பெருந்தொற்று எனும் ஆவணப்படத்தின் திரையிடல் நிகழ்வும் “இலங்கையின் இனஞ் சார்ந்த நில ஆக்கிரமிப்பு: முறைகள், விளைவுகள் மற்றும் தமிழ் நில பாது காப்பு என்ற இணையவழி, கலந்துரையாடல் நிகழ்வும் பாராளுமன்ற உறுப்பினர் சிவி. விக்னேஸ்வரன் தலைமையில் **Zoom, You tube** ஊடாக நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்கான **Zoom Link: , htt ps://bit.ly/Land Grab 2021 Webinar ID: 841 5154 5684 Passcode: TH 2021** என்பனவாகும். (4-7)

# அபிவிருத்தி மீளாய்வு கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான மீளாய்வுக் கலந்துரையாடல் நேற்றுக் காலை மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பதினைந்து பிரதேச செயலக பிரிவு ரீதியாகவும் இனங்காணப்பட்டு நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வரும் வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, வாரிசௌபாக்கியா செயற்பாடுகள் உள்ளிட்ட அனைத்து அபிவிருத்தி செயற்பாடுகளின் தற்போதைய நிலை மற்றும் அவற்றை மேம்படுத்துவதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக இணைய நிகழ்நிலை ஊடாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

(4-7-33)

# ‘முந்து தமிழ்’ நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைக் கம்பன் கழகமும் அவுஸ்திரேலியக் கம்பன் கழகமும் இணைந்து நடத்தும் “முந்துதமிழ்” எனும் மாதாந்த இயலரங்கின் செப்டெம்பர் மாத நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு நிகழ்நிலை நிகழ்வாக நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வை **AKILA ILANGAI KAMBAN KAZHAGAM KAMBAN KAZHAGAM AUSTRALIA** எனும் யுடியுப் முகவரிகளிலும் **KAMBAVARITHY ILANKAI JEYARAJ KAMBAN KAZHAGAM AUSTRALIA** எனும் பேஸ்புக் முகவரிகளிலும் பார்வையிட முடியும். (4-7)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

சிவதொண்டர் சிவ மங்கையர் அமைப்புகளின் ஏற்பாட்டில் நாளைவெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை வட்டுக்கோட்டை மாவடிச்சந்தியில் அமைந்துள்ள ஆரம்ப மருத்துவப் பராமரிப்பு நிலைய வைத்தியசாலையில் இரத்ததான முகாம் இடம்பெறவுள்ளது.

குறித்த இரத்ததான முகாம் நிகழ்வில் அனைத்துக்குருதிக் கொடையாளர்களையும் தவறாது கலந்து கொண்டு உயிர் காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (4-7-18)

# விபத்து; ஒருவர் படுகாயம்



(குப்பிழான்)

மீசாலை- புத்தூர் சந்தியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்ற உழவு இயந்திரம்- மோட்டார்ச் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தவர் கை மற்றும் கால்களில் காயங்கள் ஏற்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுச் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.


இதேவேளை, சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-7-18)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் தென்மராட்சி மண்டுவில் இலந்சி ஆரணியம் குமரகோட்டம் முருகமூர்த்தி ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ தே.கௌரி சங்கரக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (4-7)




# சங்கடஹர சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணார் பண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான சங்கடஹர சதுர்த்தி உற்சவத்தை முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டபப் பூஜை என்பன நடைபெற்று விநாயகப் பெருமான் உள்வீதி வலம் வருவார் என ஆலய பிரதம குரு அறிவித்துள்ளார்.

(4-7)

# யாழ்.குருநகர்ப் பகுதியில் 350 கிலோ மஞ்சள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் 350 கிலோ 650 கிராம் மஞ்சள் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

குருநகர் ஐந்து மாடி கட்டடத்தொகுதிக்கு அண்மித்த கடற்பரப்பில் கைவிடப்பட்டிருந்த படகொன்றில் இருந்தே குறித்த மஞ்சள் மீட்கப்பட்டுள்ளது. கடற்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அவை மீட்கப்பட்டன. (4-7-33)

# வல்வெட்டித்துறை நகரசபை தவிசாளராக செல்வேந்திரா தெரிவு



(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நகர சபைத் தவிசாளராக சுயேட்சை குழுவின் உறுப்பினர் சபாரத்தினம் செல்வேந்திரா ஒரு மேலதிக வாக்கினால் வெற்றி பெற்றார்.

வல்வெட்டித்துறை நகர சபைத் தவிசாளர் தெரிவு அமர்வு நேற்று முற்பகல் 10 மணிக்கு நகர சபைக்குரிய மண்டபத்தில் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிரஞ்சன் தலைமையில் ஆரம்பமானது.

வல்வெட்டித்துறை நகர சபை தவிசாளர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் கோணலிங்கம் கருணானந்தராசா அண்மையில் கொவிட் நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார்.

அதனால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே புதிய தவிசாளர் தெரிவு இடம்பெற்றது.

(4-7-18-33-60)

# தடுப்பூசியின் பலனே தொற்றாளர்களின் வீழ்ச்சி



(கொழும்பு)

அண்மையில் நாடளாவிய ரீதியில் பதிவாகும் கொவிட் - 19 வைரஸ் தொற்றாளர்கள் மற்றும் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் கணிசமானளவு வீழ்ச்சியேற்பட்டிருக்கின்றது. பரிசோதனைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதன் காரணமாகவே தொற்றாளர் எண்ணிக்கையில் வீழ்ச்சியேற்பட்டிருப்பதாக சிலர் கூறுகின்றனர். ஆனால் அதில் எவ்வித உண்மையும் இல்லை. மாறாக அண்மையில் விதிக்கப்பட்ட போக்குவரத்துக்கட்டுப்பாடுகள் மற்றும் செயற்திறனான தடுப்புசி வழங்கல் ஆகியவற்றின் பிரதிபலனாகவே இந்த வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது என்று தொற்றுநோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

கொவிட் - 19 வைரஸ் தொற்றினால் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கடந்த மாதம் பதிவான 239 மரணங்களில் 220 பேர் முதலாம், இரண்டாம் கட்டத் தடுப்புசிகளைப் பெற்றுக்கொள்ளாதவர்களாவர். எனவே தடுப்புசியைப் பெறுவதன் ஊடாக தொற்றினால் ஏற்படும் உயிரிழப்புக்களைப்பெருமளவிற்குக்குறைத்துக்கொள்ளமுடியும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

மேலும்கொவிட் - 19 வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் அக்காலப்பகுதியில் நன்கு ஓய்வெடுப்பது மிகவும் அவசியமாகும். தொற்றுக்குள்ளானவர்கள் உடலைக் களைப்படையச்செய்யும் வேலைகளில் ஈடுபட்டு, அதனால் உடலில் ஒட்சிசனின் அளவு குறைவடைந்து பின்னர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட பல சம்பவங்கள் பதிவாகியுள்ளன. எனவே தொற்றாளர்களைப் பொறுத்தமட்டில் ஓய்வு என்பது மிக முக்கியமானதாகும். அதேவேளை முழுமையாகக் குணமடைந்ததன் பின்னர் ஓய்விலேயே இருப்பதைத் தவிர்த்துக்கொண்டு, தமது அன்றாட வாழ்க்கை முறைக்குத் திரும்பவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (நி-5)

# ரத்வத்த குறித்து விசாரிக்க விசாரணைக்குழு-அரசாங்கம் முடிவு

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த அநுராதபுரம் சிறைக்குள் நுழைந்து கைதிகளின் தலையில் துப்பாக்கி வைத்து கொலை அச்சுறுத்தல் விடுத்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரிக்க ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையிலான விசாரணைக் குழுவை அமைக்க அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று இந்த விவகாரம் குறித்து கருத்து வெளியிடும்போதே நீதி அமைச்சர் அலி சப்ரி இதனைத் தெரிவித்தார்.

வெலிக்கடை மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலைகளில் நடந்த சம்பவங்கள் ஒரு போதும் நடந்திருக்கக் கூடாதவை. இவ்வாறான சம்பவங்கள் கண்டிக்கப்பட வேண்டும். அது அவமானம் எனவும் நீதி அமைச்சர் குறிப்பிட்டார்.

குற்றப் புலனாய்வு பிரிவு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு என்பனவும் இது குறித்த விசாரணைகளைத் தொடங்கியுள்ளதாகவும் நீதி அமைச்சர் சுட்டிக்காட்டினார். கைதிகளின் பாதுகாப்பு மற்றும் கண்ணியத்தை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துள்ளது.

அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது எனவும் நீதி அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டார். (நி-5)

# தனித்து போட்டியிட தயாராகும் மனோ அணி

(கொழும்பு)

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலக தயங்கப் போவதில்லையென தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

தமிழ் முற்போக்கு கூட்டணி இதுவரை ஐக்கிய மக்கள் சக்தியின் கீழான கூட்டணியில்தான் இணைந்து செயற்பட்டு வருகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியிடம் சில கோரிக்கைகளை முன்வைத்திருப்பதாகவும், அவை நிறைவேற்றப்படாத பட்சத்தில் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகத் தயங்கப்போவதில்லை எனவும் வரும் தேர்தல்களில் தனித்தே போட்டியிடவிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# விமல் வீரவன்ச அணியுடனான சந்திப்பை திடீரென இரத்து செய்தார் பிரதமர்

(கொழும்பு)

அமைச்சர் விமல் தலைமையிலான அணியை சந்திக்கும் திட்டத்தை திடீரென ஒத்திவைத்தார் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ. கெரவலப்பிட்டிய யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் 40 வீதப் பங்கை அமெரிக்க நிறுவனமொன்றுக்கு அளிக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்தை அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையிலான அணியினர் கடுமையாக எதிர்த்து வருகின்றனர்.

இந்த நிலையில் இத்தாலியிலிருந்து நாடுதிரும்பிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை நேற்று சந்திக்க அளித்த சந்தர்ப்பத்தை இரத்து செய்துள்ளார்.

எனினும் இன்று வியாழக்கிழமை இந்தச் சந்திப்பு மாலை 4 மணிக்கு அலரிமாளிகையில் நடத்தப்படும் என்று அலரிமாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இச்சந்திப்பு நேற்று நண்பகலில் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடக்கவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)


# கேள்வி அறிவித்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி (வடக்கு மாகாணம்)

1. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி அவர்கள், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான / பொருட்களுக்கான இப்போது தகவுடையோரும் தகைமைபெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.

2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

3. கேள்வியாளர்கள் நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டதும் கறுப்புப் பட்டியலில் பெயர், இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.

4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் பகுதி IV இலும் மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி, (தொலைபேசி இல 0212285932/0212225719)** அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப்பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் காலை 09.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.

6. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி** எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைசமர்ப்பித்து **23.09.2021ம் திகதி முதல் 06.10.2021ம்** திகதிவரை **மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 15.00** மணிவரையான காலப்பகுதியில் கீழ்வரும் அட்டவணையில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத தொகையினை கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

7. கேள்விகள் **07.10.2021ம்** திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தலைவர், பிராந்திய கேள்விச்சபை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி** எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு வேலைகளுக்குமான கேள்வி இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதரவிரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் முடிவுறுத்தல் காலத்தின் பின் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.

8. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணைப்பணம் (Bid Security) செலுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

9. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுகோரலை இரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

| No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million without VAT | Grade Building | Contract Period | Non Refund | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Security Amount | Validity Period |
| 01 | NP/K/RDHS/B/LM/2021/11 | Renovation of RMSD at RDHS Office. Kilinochchi. | 4.4 | C7 and C8 | 02 Month | 1,000.00 | 44,000.00 | 09/12/2021 |

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**கிளிநொச்சி.**

(C-2681)

# அமைதியை பின்பற்றும் நாடுகளுடன் பணியாற்ற அமெரிக்கா தயார்

## ஐ.நா வில் ஜோ பிடன்

(நியூயோர்க்)

**அமைதியை பின்பற்றும் எந்த நாடுகளுடனும் இணைந்து பணியாற்ற அமெரிக்கா தயாராக உள்ளது என ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் அமெரிக்க அதிபர் ஜோ பிடன் தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில், ஆப்கானிஸ்தானில் 20 ஆண்டு கால பிரச்சினையை நாம் முடிவுக்கு கொண்டு வந்துள்ளோம். இந்தப்போரை முடிவுக்கு கொண்டு வந்துள்ள நாம் அங்கு வெளியுறவுக் கொள்கை என்ற கதவுகளை திறந்துள்ளோம்.

ஆயுதங்கள் கொரோனா வைரஸை வீழ்த்தாது. ஒருங்கிணைந்த அறிவியல் மற்றும் அரசியல் சக்திகளால் கொரோனாவை வீழ்த்தலாம். சிகிச்சைக்கான வசதிகளை விரிவுபடுத்தி உலகில் உள்ள உயிர்களை காக்க வேண்டும். எதிர் காலத்தில் உலக சுகாதார பாதுகாப்புக்கான நிதிக்காக புதிய நடைமுறைகளை நாம் உருவாக்க வேண்டும்.

பிளவுபட்ட உலகில் மீண்டும் ஒரு புதிய பனிப்போரை உருவாக்க நாங்கள் முயற்சிக்கவில்லை. அமைதியை பின்பற்றும் எந்த நாட்டுடனும் இணைந்து பணியாற்ற அமெரிக்கா தயாராக உள்ளது.

20 ஆண்டுகளுக்கு முன்னர் இரட்டைக் கோபுர தாக்குதல் நடந்தபோது இருந்த அமெரிக்கா தற்போது இல்லை. இன்று நாம் சிறந்த ஆயுதங்கள் மற்றும் அதிக திறனுடன் உள்ளோம் எனத் தெரிவித்தார். (7-4)

# சார்க் அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு இரத்து




(நியூயோர்க்)

நியூயோர்க்கில் நடைபெறவிருந்த சார்க் வெளியுறவு அமைச்சர்களின் மாநாடு இரத்து செய்யப்பட்டுள்ளது.

சார்க் அமைப்பின் வெளியுறவு அமைச்சர்களின் மாநாடு நாளை மறுதினம் சனிக்கிழமை நியூயோர்க் நகரில் நடைபெற இருந்தது.

இந்த மாநாட்டிற்கு, நேபாளம் தலைமை ஏற்க இருந்த நிலையில், தலிபான் பிரதிநிதிகளையும், இந்த மாநாட்டில் பங்கேற்க அனுமதிக்க வேண்டும் என பாகிஸ்தான் வலியுறுத்தியதாக தகவல் வெளியானது.

தலிபான்களால் ஆளப்படும் போரால் பாதிக்கப்பட்ட நாடான ஆப்கானிஸ்தானின் பங்கேற்பு குறித்து உறுப்பு நாடுகளின் ஒருமித்த ஒப்புதல் இல்லாததால் சார்க் மாநாடு இரத்து செய்யப்பட்டுள்ளது என்று அமைப்பின் பல இராஜதந்திர வட்டாரங்கள் உறுதி செய்துள்ளன.

குறிப்பாக இது தொடர்பில் ஒரு அறிக்கையை வெளியிட்ட நேபாள வெளியுறவு அமைச்சகம், அனைத்து உறுப்பு நாடுகளின் ஒப்புதல் இல்லாததால் சந்திப்பு இரத்து செய்யப்பட்டதாக தெரிவித்தது. (7-4)

### தடுப்பூசி செலுத்தாததால்

# உணவு விடுதிக்குள் நுழைய பிரேசில் ஜனாதிபதிக்கு அனுமதி மறுப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்கா சென்றுள்ள பிரேசில் ஜனாதிபதி போல்சனேரோ தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத காரணத்தினால் அமெரிக்காவில் உள்ள உணவு விடுதிக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டு சாலையோர உணவகத்தில் உணவருந்தும் புகைப்படங்கள் வைரலாகி வருகிறது.

ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் கலந்து கொள்ள நியூயோர்க் சென்றுள்ள பிரேசில் ஜனாதிபதி ஜெயர் போல்சனேரோ, தன் சக மந்திரிகளுடன் சேர்ந்து இரவு நேர உணவுக்காக விடுதியொன்றுக்குள் நுழைந்துள்ளார்.

அப்போது கடமையில் இருந்த பாதுகாவலர்கள் கொரோனாத் தடுப்பூசி செலுத்திக்கொண்டதற்கான சான்றிதழை கேட்டுள்ளனர். அதற்கு அவர் தடுப்பூசி இன்னும் செலுத்திக்கொள்ளவில்லை எனத்தெரிவித்தார். இதனையடுத்து கொரோனாத் தடுப்பூசி செலுத்திக் கொள்ளாததால் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-4)

# அவுஸ்திரேலியாவில் நிலநடுக்கம்

(மெல்பேர்ன்)

மெல்பேர்ன் நகரம் உட்பட அவுஸ்திரேலியாவின் தென்கிழக்கு பகுதியில் நேற்றுக் காலை 6.0 ரிச்டர் அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

நிலநடுக்கம் மாநிலத்தின் தலைநகரான மெல்பேர்னில் இருந்து 130 கிலோ மீற்றர் தொலைவில் நிலநடுக்கத்தின் மையம் அமைந்துள்ளதாக ஐரோப்பிய மத்திய தரைக்கடல் நில அதிர்வு மையம் (EMSC) கூறியுள்ளது.

சமூக ஊடகங்களில் பதிவான காட்சிகள் சில கட்டடங்களுக்கு சேதம் விளைவித்ததைக் வெளிக்காட்டியது. ஆனால் காயங்கள் மற்றும் உயிரிழப்புகள் குறித்து எந்த தகவலும் உடனடியாக தெரிவிக்கப்படவில்லை.இந்த நிலநடுக்கம் தெற்கு அவுஸ்திரேலியா மற்றும் நியூ சவுத் வேல்ஸ் ஆகியவற்றிலும் உணரப்பட்டது. (7-4)

# கனடா பாராளுமன்றத் தேர்தலில் 17 இந்திய வம்சாவளியினர் வெற்றி

(ஒட்டோவா)

கடந்த திங்கட்கிழமை நடந்து முடிந்த கனடா பாராளுமன்றத் தேர்தலில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 17 பேர் வெற்றி பெற்றுள்ளனர்.

இந்தத் தேர்தலில் புதிய ஜனநாயகக் கட்சித் தலைவர் ஜக்மீத் சிங் 40 சதவீத வாக்குகள் பெற்று வெற்றியடைந்துள்ளார். கனடாவின் தேசியக் கட்சியொன்றில் முதல்முறையாகத் தலைவரான வெள்ளை இனத்தைச் சாராதவர் என்ற பெருமை இவருக்கு உள்ளது.

இது தவிர, பாதுகாப்புத் துறை ஹர்ஜித் சஜ்ஜன் உட்பட முந்தைய அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அனிதா ஆனந்த், பார்திஷ் சாகர் ஆகியோரும் இந்தத் தேர்தலில் மீண்டும் வெற்றிபெற்றுள்ளனர். (7-4)

# ஐ.நா. கூட்டத்தில் பங்கேற்ற பிரேசில் சுகாதார அமைச்சருக்கு கொரோனா



(நியூயோர்க்)

ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் பங்கேற்க நியூயோர்க் சென்ற பிரேசில் சுகாதார அமைச்சர் மார்செலோ குயிரோகாவிற்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பிரேசில் ஜனாதிபதி ஜெயர் போல்சனாரோவுடன் ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் பங்கேற்ற நிலையிலேயே நேற்று முன்தினம் அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதாக பிரேசில் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது நியூயோர்க்கிலேயே அவர் தனிமைப்படுத்தலில் உள்ளதாகவும் அரசாங்க தகவல் தொடர்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

அவருடன் ஐ.நா. பொதுச் சபைக்குச் சென்ற ஏனைய பிரதிநிதிகளுக்கு மேற்கொண்ட பரிசோதனையில் அவர்களுக்கு தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அரசாங்க அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தொடரில் பங்கேற்ற வேளை, முழு நேரமும் முககவசம் அணிந்திருந்ததாக தொற்று உறுதி செய்யப்பட்ட பிரேசில் சுகாதார அமைச்சர் மார்செலோ குயிரோகா தெரிவித்தார். (7-4)

# தேனீக்கள் கொட்டியதனால் பெங்குயின்கள் உயிரிழப்பு

(கேப்)

தென் ஆபிரிக்க தலைநகர் கேப் நகரில் தேனீக்கள் கொட்டியதில் அருகி வரும் பெங்குயின்கள் உயிரிழந்துள்ள அரிய வகை சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.இந்த சம்பவத்தில் 63 பெங்குயின்கள் உயிரிழந்துள்ளதாக தென் ஆபிரிக்க பறவை இன பாதுகாவலர்கள் தெரிவித்துள்ளனர்.

சிமன்சன்ஸ்டவுன் பிரதேசத்திலுள்ள கடற்கரையில் தேனீக்கள் கொட்டிய காயங்களுடன் உயிரிழந்த நிலையில் இந்த பெங்குயின்களின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த பெங்குயின்களின் உடல்கள் காணப்பட்ட அதே இடத்திலேயே உயிரிழந்த சில தேனீக்களும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக வைத்தியர் டேவிட் சுட்டிக் காட்டியுள்ளார். (7-4)

# கொவிட் தொற்றால் மரணித்தவர்களில் 89 வீதமானவர்கள் தடுப்பூசி போடாதவர்கள்

## சுகாதாரப் பிரிவினர்

(குருமன்காடு)
வவுனியாவில் கொவிட் தொற்று காரணமாக மரணமடைந்தவர்களில் 89.25 வீதமானவர்கள் எந்தவொரு தடுப்பூசியையும் பெற்றுக்கொள்ளாதவர்கள் என சுகாதாரப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் 10.75 வீதமானவர்கள் தடுப்பூசியின் ஒரு டோஸை மட்டும் பெற்றுக் கொண்டவர்கள். தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுக் கொண்ட எவரும் இதுவரை வவுனியாவில் கொவிட் காரணமாக மரணிக்கவில்லை.

எனவே, 20 வயதிற்கு மேற்பட்டோர் கொவிட் தடுப்பூசிகளைப்பெற்று உங்கள் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் கொவிட் தொற்று பரவல் தொடர்ந்தும் இருந்து வரும் நிலையில், இறப்புக்களும் தொடர்கின்றன. இந்த நிலையை கருத்திற்கொண்டு மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பாதுகாப்பாக வீடுகளில் இருப்பதன் மூலமே நிலைமையை கட்டுக்குள் கொண்டு வரமுடியும் என மேலும் தெரிவித்தனர். (7-4-6-250)




# கொரோனாவால் ஊடகவியலாளர் அந்தோனி உயிரிழப்பு

(மன்னார்)
மன்னார் மாவட்டத்தின் மூத்த ஊடகவியலாளரும், தமிழ்த் தேசியப் பற்றாளருமான பீ.ஏ.அந்தோனி மார்க் தனது 80ஆவது வயதில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார். இவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (285)

# மக்களால் தளர்த்தப்பட்ட ஊரடங்கு இயல்பு நிலையில் மன். மாவட்டம்



(மன்னார்)
நாடளாவிய ரீதியில் பயணக்கட்டுப்பாடு நீடிக்கப்பட்ட நிலையில் மன்னார் மாவட்டத்தில் இயல்பு நிலை திரும்பியுள்ளதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

மன்னார் நகரப் பகுதிகளில் வர்த்தக நிலையங்கள் உட்பட்ட அனேக கடைகள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதுடன் நகரப் பகுதியை நோக்கிய மக்களின் வருகையும் அதிகரித்துள்ளது. நீண்ட நாட்களாக ஊரடங்கு தளர்த்தப்படாமல் நீடித்து வருகின்ற நிலையில் மக்களாகவே மன்னார் மாவட்டத்தில் ஊரடங்கை தளர்த்தியுள்ளனர்.

மக்களின் நடமாட்டம் அதிகரித்துள்ள போதிலும் சமூக இடைவெளி, முக கவசம் அணிதல் உட்பட மக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பறுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-4-6-285)




லைக்கா ஞானம் அறக்கட்டளையினரால் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பாரதிபுரம் பகுதியில் முதற்கட்டமாக 1000 குடும்பங்களுக்கு உலருணவுப் பொருட்கள் நேற்று வழங்கப்பட்டன.(படம்:தேவானந்தன்)

# ஸார்ப் நிறுவனத்தால் துரிதகதியில் கண்ணிவெடி அகற்றும் பணி

(கண்டாவளை)
முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இதுவரை 17 இலட்சத்து 19 ஆயிரத்து 584 சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து 29 ஆயிரத்து 427 அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வு பெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

நேற்றைய தினம் மேற்படி நிறுவனத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அதாவது மீள் குடியேற்றம் விவசாயம் உட்கட்டமைப்பு வசதிகளை விரைவு படுத்தும் வகையில் இலங்கையின் வடபகுதியில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றலில் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ஈடுபட்டு வரும் ஸார்ப் மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனமானது கடந்த 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2021 செப்டெம்பர் மாதம் 20 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதிகளிலும் ,கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலை மற்றும் ஆனையிறவிலும் 17 இலட்சத்து 19 ஆயிரத்து 584 சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து 29 ஆயிரத்து 427 அபாயகரமான வெடி பொருட்களை அகற்றியுள்ளதாக தெரிவித்தனர்.

தொடர்ந்தும் இந்நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலை பகுதியில் துரித கதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7-4-6-315)

# அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாக கூறியமை நகைப்புக்கிடமானது

## அருட்தந்தை சக்திவேல்

(நெளுக்குளம்)
ஐ.நா.கூட்டத் தொடருக்கு முன், ஜனாதிபதி ஐ.நா. செயலாளரை சந்தித்து அரசியல் கைதிகளை பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்வதாகக்கூறியமை நகைப்புக்கிடமானது என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.


அரசியல் கைதிகளுடைய தற்போதைய நிலவரம் குறித்து நேற்று அவரால் விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நீண்ட காலமாக தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பாக உள்நாட்டில் வாக்குறுதிகளை கொடுக்க முடியாதவர்கள் சர்வதேசத்திற்கு சென்று வாக்குறுதிகள் கொடுக்கின்றார்கள் எனில் அதில் தங்களுடைய அரசியல் உள்நோக்கம் மட்டுமே தங்கியிருக்கும்.

இதனால்தான் உள்நாட்டு பொறிமுறை விடயத்தில் தமிழ் மக்களுக்கு எந்த நம்பிக்கையும் இல்லாத நிலையில் வட கிழக்கில் ஐ.நா.பிரதிநிதித்துவத்தை வேண்டி நிற்பதோடு பிரச்சினைக்கு நீதியும் தீர்வும் சர்வதேச மத்தியஸ்த்தின் தலையீட்டால் மட்டுமே கிடைக்குமென்ற நம்பிக்கையில் சர்வதேசத்தை நோக்கி நீதி குரல் எழுப்பி கொண்டிருக்கின்றனர்.

இரவிரவாக காணாமற்போனோர் அலுவலகம் திறப்பதும், காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு சலுகைகளை அறிவிப்பதும், அரசியல் கைதிகளை விடுவிப்பது என்பதும் யுத்தக் குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களை மறைத்து தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை நீதியை குழி தோண்டி புதைக்கும் செயலாகும்.

இனவாதம் பேசி ஆட்சியை கைப்பற்றி அவர்கள் இனவாதத்தை படையினர்களை பாதுகாப்பவர்கள் அடுத்த தேர்தலுக்கு முன்னர் வீழ்ந்து கொண்டிருக்கின்ற பொருளாதாரத்தை சமாளிக்கத் தமிழர் பிரச்சினையை தமக்கு சாதகமாய் சர்வதேச அரங்கில் பயன்படுத்த முனைவது இன அழிப்பின் நீட்சியே என்றார்.(7-4-6-299)




மன்னார் நானாட்டான் பிரதேச செயலக பிரிவில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கெல்விற்றஸ் நிறுவனத்தின் அனுசரணையில் தொடர்பாடலுக்கான நிலையம் (CCT) ஒத்துழைப்புடன்5000 ரூபாய் பெறுமதியான உலருணவுப்பொருட்கள் 22 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கும் 175 குடும்பங்களுக்கு கையளிக்கப்பட்டது.

(படம்-ஜோசப்நயன்)

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## 17.09.2021-17.10.2021

ஜோதிஸ்ரீ கலாமணி
சிவஸ்ரீ சிங்காரம்



பாசத்தோடு பழகியவர்களுக்கு நேசக்கரம் நீட்டும் தனுசு இராசி வாசகர்களே!

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு, மகர இராசியில் நீசம் பெற்றும், வக்கிரம் பெற்றும் சஞ்சரிக்கிறார். அவரோடு சந்திரனும் சனியும் இணைந்திருக்கின்றனர். குரு சந்திர யோகத்தோடும், குரு மங்கள யோகத்தோடும் மாதம் பிறப்பதால், எதிர்பாராத நல்ல திருப்பங்கள் உண்டாகும். தொழில் வளர்ச்சி சீராக இருக்கும். குரு நீசம் பெற்றாலும் 4-க்கு அதிபதியாக இருப்பதால் சுபவிரயங்கள் ஏற்படும்.

### மகர குருவின் சஞ்சாரம்

உங்கள் இராசிநாதன் குரு 4 ஆம் இடத்திற்கும் அதிபதியானவர். அங்கு னம் கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்கிரம் பெறும் பொழுதும், நீசம் பெறும் பொழுதும் நற்பலன்களைக் கொடுப்பார். அதே நேரம் இராசிநாதனாகவும் இருப்பதால் ஆரோக்கியத் தொல்லைகளும் உண்டு. குருவின் பார்வை தொழில் ஸ்தானத்தில் பதிவதால், தொழில் வளர்ச்சியில் பாதிப்பு ஏற்படாது. உத்தியோகத்தில் எதிர்பாராத திருப்பங்களைக் காண்பீர்கள். தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை.

### மகரச் சனியின் வக்கிர நிவர்த்திக்காலம்

மாதத் தொடக்கத்தில் சனி பகவான் உங்கள் இராசிக்கு 2ஆம் இடமான குடும்ப ஸ்தானத்தில் வக்கிரம் பெற்று சஞ்சரிக்கிறார். ஏழரைச் சனியில் இப்பொழுது பாதச் சனியின் ஆதிக்கம் நடைபெறு

## தொழில் வளர்ச்சி சீராக இருக்கும்

கிறது. உங்கள் இராசிக்கு 2, 3 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனிபகவான். புரட்டாதி 11 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். அதன்பிறகு எதிர்பார்த்த காரியங்கள் எளிதில் நிறைவேறும். இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறும். உறவினர் பகை அகலும். சகாய ஸ்தானத்தில் சனி சஞ்சரிப்ப தால் வழக்குகள் சாதகமாக முடியும். உங்களை விட்டு விலகிய உடன் பிறப்புகள் ஒன்று சேர முயற்சிப்பீர்.

பொதுவாழ்வில் புதிய பொறுப்புகள் கிடைக்கும். பூமிசேர்க்கையும் உண்டு. குடும்ப முன்னேற்றம் கருதிஎடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.




### புதனின் வக்கிர நிவர்த்திக்காலம்

மாதத்தொடக்கத்தில் கன்னி இராசியில் புதன் உச்சம் பெற்றும், வக்கிரம் பெற்றும் இருக்கிறார். உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் புரட்டாதி 17 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகி பலம் பெறுகிறார். எனவே கல்யாண வாய்ப்பு கள் கைகூடும். கடமையில் இருந்த தொய்வு அகலும். அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்ள ஆயத்தமாவீர்கள். புதிய ஒப்பந்தங்கள் வந்து அலைமோதும்.

### விருச்சிக சுக்கிரனின் சஞ்சாரம்

புரட்டாதி 17 ஆம் திகதி, விருச்சிக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்களுடைய இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் 12 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது பயணங்கள் அதிகரிக்கும். திட்டமிடாமல் செய்யும் காரியங்கள் கூட வெற்றியாகும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் குணம் அறிந்து செயற்படுவீர்கள். பெண் வழிப் பிரச்சினைகள் அகலும். தடைப்பட்டு வந்த காரியம் நிறை வேறும். இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குரு பகவானை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் பணப்புழக்கம் அதிகரிக்கும். நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். கணவன் - மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். வேலையில்லாப் பட்டதாரிகளாக விளங்கிய பிள்ளைகளுக்கு இப்பொழுது தகுதிக்கேற்ப வேலை கிடைக்கும். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வாகன மாற்றம் செய்ய உகந்த நேரம் இது. பணிபுரியும் பெண்களுக்கு சம்பள உயர்வும், சலுகைகளும் கிடைக்கப்பெறும்.



அமைதியாக இருந்தே அரிய பணிகள் பலவும் செய்யும் மகர இராசி வாசகர்களே!

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சனி உங்கள் இராசியிலேயே வக்கிரம் பெற்று சஞ்சரிக்கிறார். அவரோடு குரு மற்றும் சந்திரன் ஆகிய கிரகங்க ளும் இணைந்திருக்கின்றன.

ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடைபெறும் நேரத்தில் சனி வக்கிர நிவர்த்தியாவதால், எதிர்பார்த்த நற்பலன்கள் படிப்படியாக நடைபெறும். வருமானப் பற்றாக்குறை அகலும். தொழில் முயற்சியில் அனுகூலம் கிட்டும்.

### மகர குருவின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். அவர் வக்கிரம் பெற்றும், நீசம் பெற்றும் சஞ்சரிக்கிறார். 12-க்கு அதிபதி நீசம் பெறுவது நன்மைதான் என்றாலும், சகாய ஸ்தானாதிபதியாகவும் குரு விளங்குவதால் நன்மையும், தீமையும் கலந்தே நடைபெறும்.

பயணங்களால் பலன் கிடைக்கும். சொத் துக்கள் வாங்கும் யோகம் உண்டு. உடன் பிறப்புகள் பகையாகலாம். தொழில் பங்குதாரர்களால் ஒரு சிலர் ஏமாற்றங்களை சந்திக்க நேரிடும்.

### மகரச் சனியின் வக்கிர நிவர்த்திக்காலம்

மாதத் தொடக்கத்தில் சனி பகவான் உங்கள் இராசியிலேயே வக்ரம் பெற்று சஞ்சரிக்கிறார். ஏழரைச் சனியில் ஜென்மச் சனியின் ஆதிக்க காலம் நடைபெறுகிறது.

எதைச் செய்தாலும் அனுபவஸ்தர்களின் ஆலோசனைகளை கேட்டு செய்தால்தான் அதில் வெற்றிபெற முடியும்.


## தொழில் முயற்சியில் அனுகூலம் கிட்டும்

தனாதிபதியாகவும் சனி பகவான் விளங்குவதால் புரட்டாதி 11 ஆம் திகதி சனி வக்கிர நிவர்த்தியானதும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள்.

குடும்ப முன்னேற்றம் கூடும். அடகு வைத்த நகைகளை மீட்பீர்கள். பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் நேரம் இது.

### புதனின் வக்கிர நிவர்த்திக்காலம்

மாதத் தொடக்கத்தில் புதன், உங்கள் இராசிக்கு 9 ஆம் இடமான பாக்கிய ஸ்தானத்தில் உச்சம் பெற்றும், வக்கிரம்




பெற்றும் சஞ்சரிக்கிறார். புரட்டாதி 17ஆம் திகதி புதன் வக்கிர நிவர்த்தியாவதால் அதன்பிறகு படிப்படியாக முன்னேற்றங்கள் ஏற்படும். மேலும் மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் அகலும்.

தந்தை வழி உறவினர் நெருக்கமும், தகுந்த ஆதாயமும் கிடைக்கும்.

6-க்கு அதிபதியாகவும் புதன் விளங்குவதால் உத்தியோகத்தில் பதவிஉயர்வும், எதிர் பார்த்த சலுகைகளும் கிடைக்கலாம். புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

### விருச்சிக சுக்கிரனின் சஞ்சாரம்

புரட்டாதி 17 ஆம் திகதி, விருச்சிக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் லாப ஸ்தானத்திற்கு வரும்போது மிகுந்த நன்மைகளைச் செய்வார். குறிப்பாக தொழில் முன்னேற்றம் அதிகரிக்கும். புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பர். பெண் பிள்ளைகளின் சுபச்சடங்குகள் நடைபெறும். பூர்வீக சொத்துப் பிரச்சினை நல்ல முடிவிற்கு வரும். இம்மாதம் சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

### பெண்களுக்கான பலன்கள்

ஜென்மச் சனியின் ஆதிக்கம் வலுவடைவதால் மனநிம்மதி குறையும். ஆரோக்கியத் தொல்லைகளும், மருத்துவச் செலவுகளும் உண்டு. குருவின் ஆதிக்கத்தால் காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடிவிடும். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்து செல்லுங்கள். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றிபெறும். பணிபுரியும் இடத்தில் உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

(தொடரும்...)

# ‘ஒன்லைன்’ மூலமாகக் கூட மதுபான விற்பனைக்கு அனுமதிக்கக் கூடாது

## இலங்கை மருத்துவ சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

**தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் நீக்கப்படுவதற்கு முன்னர் மதுபான விற்பனை நிலையங்களை திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை பல பிரச்சினைகளை தோற்றுவிக்கும் என்று இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.**

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கு கடிதமொன்றை அனுப்பி. அந்த கடிதத்தின் ஊடாக இலங்கை மருத்துவ சங்கம் இதனைக் குறிப்பிட்டுள்ளது. கொவிட் தொற்று பரவல் அதிகரிப்பதோடு, வீட்டு வன்முறைகள் மற்றும் வீதி விபத்துக்கள் அதிகரித்தல் என்பனவும் இதன் மூலம் அதிகரிக்கும்.

இதன் காரணமாக மதுபான விற்பனையை நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு இலங்கை மருத்துவ சங்கம் நிதி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. இணைய வழியூடாகக் கூட மதுபானத்தை விற்பனை செய்யாமலிருப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் இலங்கை மருத்துவ சங்கம் அதன் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. (நி-5)

# தேரர்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்தவர்களே ராஜபக்ஷவினர்

## போட்டுத் தாக்கும் சஜித் அணியினர்



(கொழும்பு)

ராஜபக்ஷ அரசு தேரர்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்தது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் ஊடகங்களிடம் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"2020ஆம் ஆண்டு முதல் தற்போது வரை வெளிநாட்டிலிருந்து வந்த வைரஸால் நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும். இந்த அரசு ஆட்சிக்கு வந்தது முதல் ராஜ பக்ஷ உறவினர்களால் வந்த வைரஸால் மக்கள் இரண்டாவது முறையாகப் பாதிக்கப்பட வேண்டி இருக்கின்றது." ராஜபக்ஷ அரசதரப்பினர் நாட்டின் பெரும் பகுதியைச் சீனாவுக்குத் தாரை வார்த்துக் கொடுத்துள்ளனர். சங்ரிலா ஹோட்டல் பகுதி. துறைமுக நகர பெரும் பகுதி ஆகியவற்றை சீனாவுக்கு வழங்கியுள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் அமெரிக்க பிரஜா வுரிமை கொண்டவர்கள். நாட்டின் சொத்தை அமெரிக்காவிடம் ஒப்படைக்கின்றனர்.

இதன் உச்சமாக கடந்த வாரத்தில் இந்த நாட்டின் மொத்த மின் உற்பத்தி நிலையங்களினதும் உரிமத்தை வெளிநாட்டவர்களுக்கு ஒப்படைத்து விட்டனர். கெரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலையத்தின் 40 சதவீத பங்குகள் திறை சேரிக்குச் சொந்தமானவை. 23.9 சதவீத பங்குகள் ஊழியர் சேமநல நிதியத்துக்குச் சொந்தமானவை.

இந்த நாட்களில் ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழு அமர்வுகள் இடம் பெறுகின்றன. இந்த அரசு சங்கைக்குரிய தேரர் கலைள ஏமாற்றி ஆட்சிக்கு வந்தது. இந்த அரசைப் போன்று பொய் கூறும் ஓர் அரசைப் பார்த்ததில்லை என்று முருத்தெட்டுவே ஆனந்த தேரர் கூறுகின்றார். ஜனாதிபதி ஐ.நாவிலிருந்து வந்து சிறைக் கைதிகளை விடுதலை செய்தாலும் ஆச்சரியப் பட வேண்டியதில்லை" என அவர் தெரிவித்தார். (நி-5)

# கடன் எல்லையை அதிகரிக்க அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட கடன் பெறும் எல்லையை 3,397 பில்லியன் ரூபாவாக அதிகரிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய, 2020 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் 2021 ஆம் ஆண்டுக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள 2,997 பில்லியன் ரூபாய் கடன் எல்லையை 400 பில்லியன் ரூபாவினால் அதிகரித்து 3,397 பில்லியன் ரூபாவாக திருத்துவதற்கும், அதற்காக குறித்த ஒதுக்கீட்டுச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காகவும் நிதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை இவ்வாறு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

எனினும், கொவிட் 19 பெருந்தொற்று காரணமாக அரச வருமானம் குறைவடைந்தமை, சுகாதாரத்துறையின் செலவு, வருமானத்தை இழந்தவர்களுக்கான நிவாரணம் வழங்கல் மற்றும் தமது வருமானத்தில் சம்பளம் வழங்கும் நிறுவனங்களின் வருமானம் இழக்கப்பட்டமையால் சம்பளம் மற்றும் ஏனைய செலவுகளுக்காக மேலதிக நிதியொதுக்கீடுகளை வழங்குவதற்கு நேரிட்டமை, இதர துறைகளில் ஏற்பட்ட செலவு அதிகரிப்பு போன்ற காரணங்களால் இவ்வாறு கடன் எல்லையை அதிகரிக்க வேண்டியேற்பட்டுள்ளதாக நிதியமைச்சரின் யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நல்லவர் யார்?

ஒரே ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார். அவர் ஒரு வித்தியாசமான ராஜா. எந்தவகையில் வித்தியாசமானவர் என்று கேட்டால் மக்களிடம் வரி வசூல் செய்வதில் கொஞ்சம் வித்தியாசமானவர்.

ஏனைய மன்னர்கள் மாதிரி இவர் நேரடியாக வரிவசூல் செய்வதில்லை. கொஞ்சம் மறைமுகமாக அதைச் செய்வார்.எப்படி என்றால்..

ஒவ்வொரு குடி மக்களுக்கும் மாதம் ஒரு மரக்கால் நெல் மக்கள் கொடுக்கிறது இல்லை.

ராஜா மக்களுக்குக் கொடுப்பார். அதாவது அரண்மனையிலேயிருந்து ஒவ்வொரு வீட்டுக்கும் நெல் வந்து சேரும்.

அந்த ஒரு மரக்கால் நெல்லை இவர்கள் வாங்கிக் கொண்டு அதற்குப் பதிலாக ஒரு மரக்கால் அரிசியை ராஜாவுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டும். இதுதான் அந்த ஊர் வழக்கம். ராஜா ஜனங்களுக்கு நெல்லைக் கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக அதே அளவு அரிசியாகத் திருப்பி வாங்கிக் கொள்வார்.இதைத் தவிர வரி ஏதும் வசூல் செய்வதில்லை. இது மேம்போக்காக பார்ப்பதற்கு ஏதோ சாதாரணமாக தெரிந்தாலும்.. குடி மக்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள்.

ராஜா கொடுக்கிற நெல்லையும் அரிசியாக்க வேண்டும். அதோடு இன்னும் பாதி அரிசியை இவர்கள் சேர்த்தும் கொடுத்தாக வேண்டும்.

என்ன செய்வது? மக்கள் ராஜாவைத் திட்ட ஆரம்பித்தார்கள்? இந்த ராஜா எப்பொழுது இறப்பார் என்று எதிர்பார்க்க ஆரம்பித்து விட்டார்கள். பல பேர் அந்த ஊரிலே வீட்டைக் காலி செய்து வெளிதேசத்திற்குப் போய்விட்டார்கள்.

மக்கள் எதிர்பார்த்த மாதிரியே நடந்தது. அந்த மன்னன் நோய் வந்து படுத்த படுக்கையாகிவிட்டான். ராஜா இப்படி சாகக் கிடக்கிறார் என்று தெரிந்தும் மக்கள் யாருமே பார்க்க வரவில்லை.

ஏன் என்னை யாருமே பார்க்க வரவில்லை.. என்று மந்திரியிடம் கேட்டார் ராஜா.எங்கள் ஊரிலே மக்கள் எங்கே இருக்கின்றார்கள் பார்க்க வருவதற்கு? என்றார் அவர்.

ஏன் என்ன ஆகிவிட்டது அவர்களுக்கு? என்று கேட்டார் இவர்.

அமைச்சர் அப்பொழுது தான் அரசனுக்கு அவன் செய்த தவறைச் சுட்டிக்காட்டினான். மக்களுக்கு இழைத்த கொடுமையை எடுத்துச் சொல்லி புரியவைத்தார்.

மன்னருக்கு ஞானோதயம் வந்து செய்த பாவங்களை எண்ணி வருத்தப்பட்டான்.மெதுவாக அமைச்சர் பக்கம் திரும்பி எங்கே என் மகன்? என்று கேட்டான்.அவர் எங்கேயாவது ஊர் சுத்திக் கொண்டிருப்பார். சூதாட்ட விடுதிகளிலே கிடப்பார் என்றார் அமைச்சர். அவன் எங்கேயிருந்தாலும் உடனே அழைத்துக் கொண்டு வா என்று உத்தரவு போட்டார் ராஜா. அடுத்த நாளே இளவரசனைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

தந்தையே என்ன செய்ய வேண்டும் நான்.. சொல்லுங்கள் என்று கேட்டார். அவர் சொன்னார். மகனே மக்களுக்கு நான் பொல்லாதவனாகிவிட்டேன். அவர்கள் எல்லாம் என்னை நல்லவன் என்று சொல்ல வேண்டும். அப்படி அவர்களை சொல்ல வைக்க வேண்டியது உன்னுடைய பொறுப்பு என்றார்.

தந்தையே நீங்கள் கவலைப்படாதீர்கள். உங்களை மிகவும் நல்லவர் என்று மக்கள் சொல்லும் படியாக வைக்கின்றேன் என்றான் பையன்.அதற்குப் பின்பு கொஞ்ச நாளிலே பையன் பட்டத்திற்கு வந்தான். வரி வசூல் செய்கின்ற முறையில் ஒரு மாற்றத்தை உண்டு பண்ணினான்.

இவன் என்ன செய்தான். ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு மரக்கால் உமியை கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக ஒரு மரக்கால் அரிசியை வாங்கினான்.அப்பா நெல்லைக் கொடுத்துவிட்டு அரிசியாக வாங்கினார். இவன் உமியைக் கொடுத்துவிட்டு அரிசியாக வாங்கினான் கொஞ்ச காலம் ஆகிவிட்டது. ஒருநாள் மந்திரியைக் கூப்பிட்டுக் கேட்டான். அமைச்சரே மக்கள் என்ன பேசிக் கொள்கின்றார்கள். என்று விசாரித்தான்.உங்கள் அப்பன் மிகவும் நல்லவன் என்று பேசிக் கொள்கின்றார்கள் என்றார் அமைச்சர்.

எப்படி இருக்கு பாருங்க இது? அப்பாவுக்குக் கொடுத்த வாக்கைப் பிள்ளை காப்பாற்றிவிட்டான். இந்தக் காலத்திலேயும் இது மாதிரி அப்பாவுக்கு உதவுகின்ற பிள்ளைகள் உண்டு. ஒரு பிள்ளை சொன்னான். நான் எங்கள் அப்பாவுக்கு மிகவும் உதவியாக இருக்கின்றேன் என்றான். அப்படியா? உங்கள் அப்பா என்ன செய்திருக்கின்றார்? என்று கேட்டேன். சும்மா தான் இருக்கின்றார் என்றார் அவன்.



# சிறுவர் அரங்கம்

## இரண்டு முட்டாள் ஆடுகள்



அது ஒரு அடர்ந்த காடு.

அந்தக் காட்டின் நடுவே ஒரு குறுகிய பாலம் ஒன்று ஆற்றின் நடுவில் இருந்தது.

ஒரு நாள் அந்த பாலத்தை கடப்பதற்காக இரண்டு ஆடுகள் பாலத்தின் அருகில் வந்து கொண்டு இருந்தன.

ஒரு ஆடு பாலத்தின் ஒரு முனையிலும் மற்றொன்று மறுமுனையிலும் வந்து நின்றன.

அந்தப் பாலத்தை ஒரே நேரத்தில் ஒருவர் மட்டுமே கடக்க முடியும்.

இது தெரிந்தும் இரண்டு ஆடுகளும் பாலத்தை கடப்பதற்காக ஒரே நேரத்தில் ஏறி பாலத்தின் நடுவில் வந்து நின்றன.

முதலாவது ஆடு "எனக்கு வழிவிடு நான் செல்ல வேண்டும்" என்றது.

உடனே, இரண்டாவது ஆடு "நான் தான் முதலில் வந்தேன் எனக்கு நீ தான் வழி விட வேண்டும்" என்றது.

இப்படியே இரண்டு ஆடுகளும் விட்டுக் கொடுக்காமல் சண்டையிடத்தொடங்கின.

சண்டையிடும்போது இரண்டு ஆடுகளின் கால்களும் பிடிமானம் இன்றி ஆற்றில் விழத் தொடங்கின. ஆற்றில் விழுந்தவுடன் இரண்டு ஆடுகளும் தாங்கள் செய்த தவறை நினைத்து வருந்தின. இறுதியில் இரண்டு ஆடுகளும் நீரில் மூழ்கி இறந்தன.

**நீதி: விட்டுக் கொடுக்க வேண்டிய நேரத்தில் கண்டிப்பாக விட்டுக் கொடுக்க வேண்டும்.**

# மகாபாரதம்



குயில்-தான் காக்க வேண்டிய முட்டையைக் காக்கையின் கூட்டில் இட்டு அதனைக் காப்பாற்றுமாறு செய்யும். அதுபோல மன்னன் பயிர், வாணிபம், வழி, காடுகள் ஆகிய தனது பொருட்களைப் பிறரைக் கொண்டு காக்குமாறு செய்ய வேண்டும்.

பன்றி-தான் உண்ணும் கோரைப் புற்களை வேருடன் களைந்து உண்ணும். அது போல மன்னன் பகைவர்களை வேருடன் களைந்து கொல்ல வேண்டும்.

மேருமலை-தன்னைத் தாண்டத்தகாத வாறு அசைவற்று நிற்கும். அதைப் போல வேந்தனும் தன்னைப் பகைவர் வெற்றி கொள்ள முடியாதபடி உறுதியுடன் இருக்க வேண்டும்.

ஒன்றும் இல்லாத வீடு-பல பொருட்களை விரும்புவதாக இருக்கும். அதைப் போலவே அரசனும் எல்லாப் பொருட்களையும் விரும்புபவனாக இருக்க வேண்டும்

பாம்பு-கடும் சினத்துடன் யாரும் நெருங்க முடியாததாக இருக்கும். அதைப்போல மன்னனும் பகைவரால் நெருங்க முடியாதவனாக இருக்க வேண்டும்.

அரசன் கொக்கைப் போல ஒரே நிலைவாக இருந்து காரியத்தை முடிக்க வேண்டும். சிங்கத்தைப் போல பயமின்றி தன் ஆற்றலை வெளிப்படுத்த வேண்டும்.

ஓநாய் போல் பதுங்கிப் பாய்ந்து பகையை அழிக்க வேண்டும். அம்பு போல திரும்பாமல் பகைவர் மேல் செலுத்த வேண்டும்.

குடி, சூது, வேட்டை பாட்டு, இசை ஆகிய வற்றை அளவுடன் அனுபவிக்க வேண்டும்.

குருடனாக இருக்க வேண்டிய நேரத்தில் குருடனாக இருக்க வேண்டும். செவிடனாக இருக்க வேண்டிய நேரத்தில் செவிடனாக இருக்க வேண்டும்.

காலம், இடம் அறிந்து செயற்பட வேண்டும். பகை வலிமையையும், தன் வலிமையையும் இருபக்கமும் துணையாவார். வலிமையையும் சீர்தூக்கிப் பார்த்துச் செயற்பட வேண்டும். (தொடரும்)

தனி மனிதனின் தனி உரிமையான சிந்தனையால் சாதிக்க முடியாதது என்று எதுவுமில்லை. - ஜன்ஸன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிறீதரன் எம்.பியின் உரையில் தர்க்கரீதியான நியாயம் உண்டு

வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழின அழிப்பாக நடந்த கொடும்போரில் உயிரிழந்த பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில், சர்வதேச விசாரணைகள் தேவை என்ற கோரிக்கை ஈழத் தமிழ் மக்களாலும் சர்வதேச பொது அமைப்புகளாலும் வலியுறுத்தப்பட்டது.

இருந்தும் அதற்கான ஏற்பாடுகள் எதுவும் இதுவரை நடந்தாகவில்லை.

மாறாக, இலங்கை ஆட்சியாளர்களால் தமிழ் இனத்துக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை ஐ.நா சபையும் சேர்ந்து சமாளிக்க முற்படுவதுபோலத் தெரிகிறது.

ஆம், வன்னிப் போர் நடந்து 12 ஆண்டுகள் ஆகிவிட்டபோதிலும் இன்றுவரை ஈழத் தமிழினத்துக்கு நீதி கிடைக்கவில்லை.

மாறாக ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இதுபற்றிக் கதைப்பதும் பின்னர் இலங்கை அரசாங்கத்துக்குக் கால அவகாசம் வழங்குவதுமே நடந்தாகின்ற நிகழ்ச்சி நிரலாகும்.

தவிர, ஐ.நா சபைச் செயலாளரைச் சந்தித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ; காணாமல்போனவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென ஐ.நா செயலாளரிடம் கூறியுள்ளார்.

அப்படியானால், காணாமல்போனவர்களின் உறவுகள் வருடக்கணக்கில் போராட்டம் நடத்தி வருவது மரணச் சான்றிதழுக்கா என்ற கேள்வி எழும்.

காணாமல்போனவர்களுக்கு மரணச்சான்றிதழ் வழங்குகின்ற திட்டத்தை இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் ஆரம்பத்திலேயே முன்வைத்தனர்.

எனினும் காணாமல்போனவர்களின் உறவுகள் அதனை ஏற்க மறுத்துவிட்டனர்.

எங்களுக்கு எங்கள் உறவுகள் தேவை. அவர்களைப் படையினரிடம் நாம் ஒப்படைத்தோம். அதற்கான சாட்சியம் உண்டு.

எங்களால் படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட எங்கள் உறவுகள் எங்கே? அவர்களுக்கு நடந்தது என்ன? இதுவே உறவுகளின் கேள்வி.

நிலைமை இதுவாக இருக்கையில், காணாமல்போனவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்கப்படுமென்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஐ.நா சபைச் செயலாளரிடம் கூற முடிகிறது என்றால், ஐ.நா சபையில் என்னதான் நடக்கிறது என்ற ஐயவினா எழவே செய்யும்.

எதுஎவ்வாறாயினும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில்; இறுதிப்போரில் நடந்த படுகொலைகளுக்கு ஐ.நா சபையும் பொறுப்புக் கூறவேண்டும் எனக் கூறியதில் தர்க்கரீதியான நியாயம் உண்டு என்பதை எவரும் மறுக்க முடியாது.

சுருங்கக்கூறின், ஈழத் தமிழர்களின் விடயத்தில் இலங்கை ஆட்சியாளர்களின் கருத்தைக் கேட்டுவிட்டு, ஐ.நா மௌனமாவதைப் பார்க்கும்போது இறுதிப் போரில் நடந்த தமிழினப் படுகொலைக்கு ஐ.நா சபையும் பொறுப்புரைக்க வேண்டும் என்பது கடுமையாக வலியுறுத்தப்பட வேண்டிய விடயமாகும்.

# புலம்பெயர் தமிழர்களுடன் பேசுவதற்கு முன் அரசு கூட்டமைப்புடன் பேசவேண்டும்

## பாராளுமன்றில் எம்.ஏ சுமந்திரன்

(கொழும்பு)

புலம்பெயர் தமிழர்களுடன் பேசுவதற்கு முன் அரசு தமிழ்த்தேசியக்கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என பாராளுமன்றில்எம்.ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார பாராளுமன்றில் முன்வைத்த ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தின் போது அவர் இதனைக் கூறினார்.

ஐக்கிய நாடுகளின் பொது செயலாளரை சந்தித்த ஜனாதிபதிநாட்டின் பொறுப்புக்கூறல் தொடர்பாக வினைத்திறனாக செயற்பட தயாராக இருப்பதாக தெரிவித்திருந்தார்.

இதனை உடனடியாகவே தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு வரவேற்றது.

ஆனால் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு அந்தக் கூற்றுக்கு முற்றிலும் மாறுபட்டவகையில், எந்தவிதமான வெளிவாரி பொறிமுறைகளையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று தெரிவித்துள்ளது.

அதே போன்றுதான் வெளிநாடுகளில் வசிக்கும் தமிழ் புலம்பெயர்ந்தோருடன் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாகவும் ஜனாதிபதி அறிவித்திருந்த நிலையில் அதனையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்றுள்ளது.

ஆனால் ஜனாதிபதி தமிழ்த்தேசியக்கூட்டமைப்புடன் கடந்த ஜுலை மாதம் நடத்தவிருந்த சந்திப்பு இறுதிநேரத்தில் இரத்து செய்யப்பட்டதுடன், பின்னர் அந்த சந்திப்பை நடத்த திகதி ஒதுக்குவதாகக் கூறி2 மாதங்கள் கடந்துவிட்டன.

இன்னும் அதற்கான திகதிஒதுக்கப்படவில்லை.

அரசாங்கம் புலம்பெயர்ந்தவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவ தற்கு முன்னதாக, தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தைநடத்தவேண்டும் என்று எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (ம)

# மின்தகன நிலையம் அமைக்கும் பணி துரித கதியில் - மன்னார் அரச அதிபர்

(மன்னார்)

மன்னாரில் மின்தகன நிலையம் அமைப்பதற்கான எமது முயற்சிக்கு ஓரளவு வெற்றி கிடைத்துள்ளது. அதற்கான பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லிடி மெல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் நகர சபை மின்தகன நிலையத்திற்கான கட்டட செலவுகளை முழுமையாக ஏற்றுக்கொள்வதாக எம்மிடம் கூறியுள்ளனர். மின்தகன நிலையத்திற்கான இயந்திர தொகுதியை பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் அதிகளவான தடுப்புசிகள் மன்னார் மாவட்டத்தில் வழங்கப்படுவதன் காரணமாக மன்னாரில் 'கொரோனா' தொற்று மற்றும் மரணங்கள் குறைவடைந்துள்ளது.

60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 255 நபர்களைத் தவிர ஏனைய அனைவருக்கும் தடுப்புசிகள் வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று 30 வயது தொடக்கம் 60 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு. 20 வயது தொடக்கம் 30 வயதுக்கு உட்பட்டவர்களுக்கும் தடுப்புசிகள் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசாங்கத்தின் சுபீட்சத்தைநோக்கிய வேலைத்திட்டம் தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் சுபீட்சத்தை நோக்கிய என்ற இலக்கின் ஒரு கட்டமாக "நாட்டுக்கும் சுமை இல்லாத உழைக்கும் தலைமுறையை உருவாக்குதல்" என்னும் தொனியில் மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தினால் ஒக்ரோபர் 4 திகதியில் இருந்து 10 ஆம் திகதிவரை தொழில் சந்தை வாரம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை ஒக்ரோபர் 8 ஆம் திகதி இணையம்மூலம்தொழிற்சந்தை வாரம் நடைபெற இருக்கிறது. அந்த தொழிற்சந்தையின் மூலம் பல்வேறுபட்ட தொழில்கள், வேலைவாய்ப்புகள் வழங்குவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதனால் படிப்பை நிறைவு செய்து வேலைவாய்ப்பினை தேடிக் கொண்டிருக்கும் இளைஞர், யுவதிகள் இதில் பங்குபற்றி பயனடைந்து கொள்ள முடியும்.

மேலதிக தகவல்களை மன்னார் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் பணியாற்றும் மனிதவலு வேலைவாய்ப்பு உத்தியோகத்தர்களை தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (4-6-7-285)

## 68 மில். ரூபாய் பெறுமதியான கேரளக் கஞ்சா மீட்பு

(மன்னார்)

நானாட்டான் பிரதேச செயலாளர்பிரிவில் உள்ள அச்சங்குளம்-நறுவிலிக்குளம் கடற்கரைப் பகுதியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் 68 மில்லியன் ரூபாய் பெறுமதியான கேரளக் கஞ்சா பொதிகளை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை வங்காலை கடற்படையினர் மீட்டுள்ளனர்.

வங்காலை கடற்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அச்சங்குளம்-நறுவிலிக்குளம் கடற்கரைப் பகுதியில் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டபோது பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் ஒரு தொகுதி கஞ்சா பொதிகளை கடற்படையினர் மீட்டுள்ளனர். இதன்போது சுமார் 228 கிலோ எடை கொண்ட கேரளக் கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

(7-4-6-285)

## மருத்துவக் குறிப்பு

கற்கண்டுடன் சீரகத்தைச் சேர்த்து வாயில்போட்டு நறநறவென்று மென்று சாப்பிட இருமல்நின்று விடும்.

# சத்திய தரிசனம்

## பிரமாண்ட லிங்கம்



- அவள் முதலில் அழுத தனது சேடிப் பெண்ணிடம் காரணம் கேட்டாள். சடிப் பெண்ணோ ஒரு சலவைத் தொழிலாளி. அவள் தனக்குப் பிரியமான கழுதை திடீரென்று இறந்து போனதற்காக அழுததாகக் கூறினாள்.
- இந்தச் செய்திபரவியதும் எங்கு பார்த்தாலும் சிரிப்பலையோடு வெட்கமும் பரவியது. காரணத்தை ஆராய்க, பகுத்தறிக. ஏதோவொரு முடிவில் குதிக்காதே. செவியில் விழுவதையெல்லாம் நம்பிவிடாதே.
- நான் உன்னைத் திருத்தியமைக்கவே வந்துள்ளேன்; அதைச் செய்து முடிக்கும் வரை உன்னை விடமாட்டேன். அதை நான் செய்து முடிக்குமுன் நீ ஓடிவிட்டாலும் என்னிடமிருந்து தப்ப முடியும் என்று நினைக்காதே.
- நான் உன்னைக் கெட்டியாகப் பிடித்திருப்பேன். நீ என்னை விட்டகன்றால் நான் கவலைப்படமாட்டேன். இங்கே என்னைச் சுற்றிப் பெரிய கூட்டம் வேண்டுமென்று எனக்குப் பதற்றமில்லை. (தொடரும்)

# முழுமையாக தடுப்பூசி செலுத்தப்பட்ட பின்னர்

# புதிய திரிபுகள் குறித்து அச்சப்படத் தேவையில்லை

## பேராசிரியர் நீலிகா



(கொழும்பு)

**நாட்டின் சனத்தொகையில் குறித்தளவானோருக்கு முழுமையாகத் தடுப்பூசி வழங்கப்பட்டதன் பின்னர், கொவிட் - 19 வைரஸின் புதிய திரிபுகள் கண்டறியப்பட்டாலும் அது குறித்து அச்சமடையத் தேவையில்லை.**

ஆகையினால் தற்போது 20 - 30 வயதிற்குட்பட்ட பிரிவினருக்கும் தடுப்பூசி வழங்கப்பட்டுவரும் நிலையில், அவ்வயதுப்பிரிவினர் இயலுமானவரை விரைவாகத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் தொற்று நோயெதிர்ப்புப்பிரிவின் பேராசிரியர் நீலிகா மளவிகே வலியுறுத்தியுள்ளார்.

நாட்டில் டெல்டா வைரஸ் அடையாளங்காணப்பட்டதன் பின்னர் அண்மைக் காலத்தில் புதிய திரிபுகள் எவையும் இனங்காணப்படவில்லை.

அதேவேளை புதிய திரிபுகள் கண்டறியப்பட்டாலும், அவற்றைத் தடுப்பூசி வழங்கலின் ஊடாகவே கட்டுப்படுத்த முடியும்.

1918 - 1919 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 'இன்புளுவென்சா' என்ற வைரஸ் பரவலினால் ஒட்டுமொத்த உலகமும் பாரிய சுகாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்தது.

அதன் விளைவாக உலக சனத்தொகையில் சுமார் 50 மில்லியனுக்கும் அதிகமானோர் உயிரிழந்தார்கள். இருப்பினும் அதற்கெதிரான நோயெதிர்ப்புச் சக்தி விருத்தியடைந்ததன் பின்னர், தற்போதும் இன்புளுவென்சா வைரஸின் வெவ்வேறு திரிபுகள் காணப்படுகின்ற போதிலும் அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் முன்னரைப்போன்று மிக மோசமானதாக இல்லை.

இன்புளுவென்சா வைரஸின் அச்சுறுத்தல் உயர்வாகக் காணப்படும் தரப்பினருக்கு, குறிப்பாக மேற்குலக நாடுகளில் இப்போதும் தடுப்பூசி வழங்கப்படுகின்றது.

எனவே அதனைப்போன்று நாட்டின் சனத்தொகையில் குறித்தளவானோருக்கு முழுமையாகத் தடுப்பூசி வழங்கப்பட்டதன்பின்னர், கொவிட் - 19 வைரஸின் புதிய திரிபுகள் கண்டறியப்பட்டாலும் அதுகுறித்து அச்சமடையத் தேவையில்லை.

ஆகவே குறித்தளவான சனத்தொகையினருக்கு முழுமையாகத் தடுப்பூசியை வழங்குவதன் மூலமே இந்தத் தொற்றுப்பரவல் நெருக்கடியிலிருந்து மீளமுடியும்.

வயது முதிர்ந்தவர்கள், ஏனைய தொற்றாநோய் நிலைமைகளால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளிட்டோருக்கு தொற்றினால் ஏற்படும் தாக்கம் உயர்வு என்பதால், தடுப்பூசி வழங்கலில் அவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டது.

இருப்பினும் அதனால் இளையோருக்கு தொற்று ஏற்பட்டாலும் அவர்களுக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படாது என்று கருதக்கூடாது.

ஆகையினால் தற்போது 20- 30 வயதிற்குட்பட்ட பிரிவினருக்கும் தடுப்பூசி வழங்கப்பட்டுவரும் நிலையில், அவ்வயதுப்பிரிவினர் இயலுமானவரை விரைவாகத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (நி-5)

# கொவிட் தொடர்பான நடைமுறையில் வெளிநாட்டு நடைமுறையை பின்பற்றலாம்

ஆரம்பத்தில் கொவிட்-19 நிலைமை தொடர்ந்த காலத்தில் இருந்து இன்றுவரை அதாவது 2020ஆம் ஆண்டின் முற்பகுதியில் இருந்து 2021 முடியும் காலம் வரை இலங்கையிலும், ஜேர்மனியிலும் நான் வாழ்ந்து இருக்கின்றேன். இதில் நான் கண்ட அனுபவத்தினை வடக்கு மாகாண மக்களுடன் நட்பு ரீதியாக பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

இரண்டு தடவைகள் ஜேர்மனிக்குச் சென்று அங்கேயுள்ள சட்ட திட்டங்களுக்கமைய தடுப்பூசிகளை பெற்று நிரந்தர தடுப்பூசி அடையாள அட்டையையும் பெற்றுக்கொண்டிருக்கும் இச் சந்தர்ப்பத்தில் நான் ஜேர்மனியில் கண்ட அனுபவங்களை வடக்கு மாகாண மக்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். அதில் இரண்டு தடவைகள் நான் தடுப்பூசி பெறச் சென்ற காலத்தில் 3 மாத இடைவெளியில் அங்குள்ள நடைமுறைகளை இங்குள்ள மக்களுக்கு அறியத் தரவிரும்புகின்றேன்.

ஜேர்மனியில் இந்தக்காலத்தில் வியாபார ஸ்தலங்கள், விருந்துபசார விடுதிகள் மற்றும் திருமண வைபவம் அனைத்தும் நடைபெறுகின்றன. எவ்வாறெனில் அவ்வாறான திருமண வைபவம், பொதுச் சந்திப்புக்களை நடத்தும் பொழுது அங்கே கூட வருபவர்கள் ஒருநாளுக்கான பரிசோதனையினைப் பெற்று கொவிட்-19 அவசர சான்றிதழினை 15 நிமிடங்களில் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

உதாரணமாக, இன்று திருமண வைபவத்தில் அல்லது மரணச்சடங்கில் ஒன்று கூடுவதாக இருந்தால் அன்று காலையில் மாநகர சபையால் அல்லது அரசாங்கத்தால் திறந்து நடத்தப்படும் ஒருநாள்பரிசோதனையினை பெற்று அவரது விருப்பம் போல 24 மணி நேரமும் நிகழ்வுகளில் கலந்து கொள்ளலாம். மேலும் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றவர்கள், காரியாலயங்களுக்கு செல்பவர்கள் மற்றும் பொதுச் சந்திப்புக்களுக்கு சாதாரண மாசுக் சென்று வரலாம்.

இங்கே குறிப்பாக வடக்கு மாகாணத்தில் இவ்விடயத்தினை கருத்தில் கொண்டு சுகாதார அமைச்சின், அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் ஒருநாள் மக்கள் பல்வேறு, இடங்களுக்குச் செல்வதற்கு ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் அல்லது பிரதேச செயலகப் பிரிவிலும் இம்முறைத் திட்டம் கொண்டுவர நடவடிக்கை எடுக்கவேண்டும் என நான் விரும்புகின்றேன்.

திருமண விழாக்கள் மற்றும் பல விழாக்கள் நடத்துபவர்கள் தாங்களாகவே இவ்வாறான பரிசோதனை நிலையத்தினை திறந்து அதற்கான செலவினை பொறுப்பேற்று நடத்திக் கொள்ளலாம். இயலுமானவரை 2 தடுப்பூசிகளைப் பெற்றால் பயமில்லாமல் முகக்கவசத்துடன் செல்லலாம்.

இவ்வாறான முறைகளைப் பின்பற்றினால் ஜேர்மன், பிரான்ஸ் போன்ற முன்னேறிய நாடுகளோடு ஒப்பிடும் பொழுது வடக்கு மாகாணத்தில் உள்ள தனியார் கல்வி நிலையங்கள் , பல்கலைக்கழகச் சான்றிதழ் வைபவம் உட்பட எங்களால் அச்சமின்றி நடத்தமுடியும்.

அதேவேளை ஆலயங்களிற்கு செல்பவர்கள் 24 மணிநேர கொவிட்-19 பரிசோதித்த சான்றிதழ்களைபெற்றுக் கொண்டு செல்லக்கூடியதாக இருக்கும்.

நான் கேள்விப்பட்டதன்படி இன்றைய நிலையில் சுகாதார அதிகாரிகள், அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் சிலர் தனிமைப்படுத்தப்படுவதன் காரணம் அவர்களது கவனயீனம் என்



தேசமான்ய M.T.S. இராமச்சந்திரன்
செயலாளர்,
இந்து பௌத்த கலாசார பேரவை.
சர்வதேச குடிவரவு, குடியகல்வு சட்ட ஆலோசகர்.

பதுதான் உண்மை. எனவே இவர்கள் தங்களது பாதுகாப்பினை உறுதிப்படுத்தினால் இவ்வாறான நிலைமை உருவாகாது என்பது எனது கருத்தாகும்.

ஒவ்வொருவரும் தாங்களே சுயமான பாதுகாப்பினை உறுதிப்படுத்திக்கொண்டால் தொற்று நோயினை கட்டுப்படுத்தலாம் என்பது எனது கருத்தாகும். மக்களை பாதுகாக்கஇந் நடவடிக்கைகளினை எடுக்க வேண்டும் என ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன். இதில் ஒரு பிரதியினை ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கின்றேன் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை சட்டமூலம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை (திருத்தச்) சட்ட மூலம் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வர்த்தக அலுவல்கள் பற்றிய அமைச்சு சார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டது.

இந்தத் (திருத்தச்) சட்ட மூலம் தொடர்பான அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் 2021 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 19 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

அதற்கமைய, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை (திருத்தச்) சட்டமூலம் இரண்டாம் வாசிப்புக்காக நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. (நி-5)

## 92...

கள் பதிவாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 12, 376 ஆக அதிகரித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 41 பெண்களும் 51 ஆண்களும் உள்ளடங்குவதாக அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## யாழில் தடுப்பூசி...

கணிசமான அளவில் குறைக்கும். மாறாக இத் தடுப்பூசியானது அதனைப் பெற்றுக் கொள்ளும் கர்ப்பவதிக்கோ, அவரது சிசுவிற்கோ எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை என ஆய்வுகள் தெரிவிக்கின்றன என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் நேற்றுப் புதன்கிழமை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் 2020 மார்ச் மாதம் முதல் 2021 செப்ரெம்பர் வரை 6 ஆயிரத்து 49 கர்ப்பவதித் தாய்மார்கள் கோவிட் - 19 நோய்த் தொற்றுக்குள்ளாகி உள்ளனர்.

இதில் இந்த வருடம் இதுவரை 5 ஆயிரத்து 938 கர்ப்பவதித் தாய்மார் தொற்றுக்குள்ளாகியமை குறிப்பிடத்தக்கது. அவர்களில் இதுவரை 43 தாய்மார்கள் நாடு முழுவதும் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் இவ்வருடம் இதுவரை 184 கர்ப்பவதித் தாய்மார் கோவிட் - 19 தொற்றுக்கு ஆளாகி சிகிச்சை பெற்றுள்ளனர்.

தரவுகளின்படி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரை பதியப்பட்ட ஒவ்வொரு 100 கர்ப்பவதித் தாய்மார்களிலும் 3 பேர் கோவிட்-19 நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரை 4 கர்ப்பவதித் தாய்மார்கள் உயிரிழந்துள்ளமை மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

பொதுவாக கர்ப்பவதிகளுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி ஓரளவு குறைவடையும். இதன்காரணமாக இலங்குவில் கோவிட் - 19 தொற்று உட்படத் தொற்று நோய்கள் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம் உள்ளது.

தொற்றுக்குள்ளாகிய கர்ப்பவதித் தாய்மார்களில் அறிகுறிகள் இன்றியோ அல்லது மெல்லிய அறிகுறிகளுடன் மட்டும் இருப்பினும்கூட இவர்களது உடல்நிலை திடீரென மோசமடையக் கூடுமாதலால் அவர்களது சிசுவிற்கு ஆபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகம்.

கோவிட்-19 தொற்றுக்குள்ளாகாத கர்ப்பவதித் தாய்மார்களைவிட கோவிட் - 19 தொற்றுள்ள கர்ப்பவதித் தாய்மார்கள் கர்ப்பகால சிக்கல் நிலைகளுக்காக அதிகமாக அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்க வேண்டிய தேவையுட்படப் பாதகமான கர்ப்பவிளைவுகளுக்கும் தொற்று நோயின் நிமிர்த்தம் ஏற்படக்கூடிய காலத்திற்கு முன்னான பிறப்பு, சிசு இறப்பு மற்றும் தாய் மரணத்திற்கும் உள்ளாகின்றனர்.

ஆனால், வருந்தத்தக்க வகையில் யாழ்ப்பாணத்தில் இன்னமும் கணிசமான கர்ப்பவதித் தாய்மார்கள் மத்தியில் இத் தடுப்பூசிக்கு வரவேற்பு குறைவாக காணப்படுகின்றது.

இத் தடுப்பூசியானது ஏனையவர்களைப் போலவே கர்ப்பவதிகளை கோவிட் - 19 தொற்றிலிருந்து பாதுகாப்பதுடன் தொற்றினால் ஏற்படும் பாதிப்புக்களையும் மிக கணிசமான அளவில் குறைக்கும்.

மாறாக இத்தடுப்பூசியானது அதனைப் பெற்றுக்கொள்ளும் கர்ப்பவதிக்கோ, அவரது சிசுவிற்கோ எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை என ஆய்வுகள் தெரிவிக்கின்றன என்றுள்ளது. (ம-18.33)

## ஒக்.7 யாழ்.பல்...

ரோபர் மாதம் 07 ஆம் திகதி நிகழ்நிலை வாயிலாக நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு பல்கலைக்கழக மாணவர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

பட்டமளிப்பு விழாத் தொடர்பில் தீர்மானங்களை இயற்றுவதற்காக நேற்று புதன்கிழமை நண்பகல் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாக் குழுவின் விசேட கூட்டத்தின் முடிவில் ஊடகங்களுக்கு விபரிக்கும்போதே கலாநிதி கே. சுதாகரன் இவ்வாறு தெரிவித்தார்.

35ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி, எதிர்வரும் ஒக்ரோபர் 07ஆம், 08ஆம், 09ஆம் திகதிகளில், பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது என்றும், நாட்டில் இப்போதுள்ள கொரோனா தனிமைப்படுத்தல் ஊரடங்கு நிலைமைகள் நீடிக்குமாயின் அதனை ஒக்ரோபர் 07 ஆம் திகதி நிகழ்நிலையில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும், கடந்த வாரம் யாழ். பல்கலைக்கழகத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் பட்டமளிப்பு விழாவை நேரடியாக நடத்துவதற்குச் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனுமதி வழங்கவில்லை.

இதனால் பட்டமளிப்பு விழாவை நிகழ்நிலையில் நடத்தி மாணவர்களுக்கான பட்டங்கள் உறுதிப்படுத்தப்படுத்துவதற்குப் பல்கலைக்கழக நிர்வாகம் முடிவு செய்திருந்தது.

நிகழ்நிலைப் பட்டமளிப்புக்குத் தாங்கள் இணங்கவில்லை என்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை துணைவேந்தரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதனையடுத்து துணைவேந்தரின் வேண்டுகோளுக்கமைய மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளையும் உள்வாங்கி, பட்டமளிப்பு விழாக் குழுவின் விசேட கூட்டம் நேற்று கூட்டப்பட்டிருந்தது.

கூட்டத்தின் முடிவில், எதிர்வரும் ஒக்ரோபர் 07ஆம் திகதி நிகழ்நிலையில் நடத்தி பட்டங்களை உறுதி செய்வதென்றும், தற்போதைய நிலைமைகள் சீரடைந்ததும் மரபு ரீதியான பட்டமளிப்பு வைபவத்தை மிகக் குறுகிய காலத்தினுள் நடத்துவதற்கான திகதியை முன்மொழிவதற்கென மாணவர் பிரதிநிதிகளையும் பல்கலைக்கழக அலுவலர்களையும் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

குழுவினால் முன்மொழியப்படும் திகதிகளில் பட்டமளிப்பு விழாவை நடத்துவதற்கென சுகாதார சேவைகள் திணைக்கள அனுமதியைப் பெறுவதற்கான ஏற்பாடுகளையும் இதே குழு மேற்கொள்ளவுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-18.33)

## நுகர்வோர்...

திருத்தச் சட்டமூலம் நேற்றைய தினம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தத் திருத்தச் சட்டமூலம் தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஒகஸ்ட் 19ஆம் திகதி வெளியிடப்பட்டது.

அதற்கமைய, நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை திருத்தச் சட்டமூலம் இரண்டாம் வாசிப்புக்காக நேற்று புதன்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை திருத்தச் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வர்த்தகர்கள் கட்டுப்பாட்டு விலையை விடவும் அதிக விலைக்கு உணவை விற்பனை செய்வார்களாயின், அவர்களுக்கு விதிக்கப்படும் அபராதத் தொகையை 10 ஆயிரம் ரூபாயிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் வரையில் அதிகரிக்க இந்த திருத்தச் சட்டமூலத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம)

*(முன்னர் வந்த செய்தி ஒன்று உள்ளே)*

## லொஹான்...

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாராளுமன்றில் நேற்று கேள்வி எழுப்பினார்.

பாரிய அச்சுறுத்தல்களை கருத்திற் கொண்டும் சிறைக்கைதிகள் தொடர்பிலான சர்வதேச சட்டமான நெல்சன் மண்டேலா சட்டம் (SMR) வலியுறுத்துவதன் அடிப்படையிலும் இந்த தமிழ் அரசியல் கைதிகளை யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா சிறைச்சாலைக்கு எவ்வித காலதாமதமும் இன்றி யாழ்ப்பாணம் சிறைச் சாலைக்கு மாற்றப்படுவதற்கான நடவடிக்கைகளை நீதி அமைச்சர் உடனடியாக எடுப்பாரா?

பொது முக்கியத்துவம் வாய்ந்த அவசர பிரச்சினை குறித்து கட்சித் தலைவரினால் பாராளுமன்ற நிலையியல் சட்டம் 27(2) இன் கீழ் முன்வைக்கப்படும் பிரேரணை /கேள்வியிலேயே நேற்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இவ்வாறு குறிப்பிட்டார். (ம)

## அடிப்படைப்...

ஐக்கிய நாடுகள் சபையின் 76ஆவது பொதுச்சபைக் கூட்டத்தொடரில் கலந்து கொண்டு ஜனாதிபதி நேற்று நீண்ட உரையாற்றினார்.

அதிலும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2019ஆம் ஆண்டு நாட்டில் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது.

அதற்கு முன்னர், அதாவது 2009ஆம் ஆண்டு வரையில் சுமார் 30 வருடங்களாக இலங்கையில் யுத்தம் நிலவியது.

பயங்கரவாதம் என்பது, உலகளாவிய அச்சுறுத்தல் என்பதோடு, அதனை வெற்றிகொள்ள வேண்டுமாயின், விசேடமாகப் புலனாய்வுத் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்பு அத்தியாவசியமாகின்றது.

கடந்த அரை நூற்றாண்டுக் காலத்தில், இலங்கையில் ஆயிரக்கணக்கான உயிர்களும் பல தசாப்தங்களுக்குரிய செழிப்பும் இழக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற வன்முறைச் செயல்கள் இலங்கையில் மீண்டும் நடக்காது என்பதை உறுதி செய்வதில் எனது அரசு உறுதியாக உள்ளது. அதனால், அவற்றின் பின்னால் காணப்படும் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

இனப் பாகுபாடு, மதம் மற்றும் பாலின வேறுபாடுகளின்றி அனைத்து இலங்கையர்களுக்கும் வளமானதும் நிலையானதும் பாதுகாப்பானதுமான எதிர்காலத்தை உருவாக்குவதே என்னுடைய அரசாங்கத்தின் நோக்கமாகும்.

இலங்கையின் பாராளுமன்றம், நீதித் துறை மற்றும் சுயாதீன சட்டரீதியான அமைப்புகள், தங்கள் செயற்பாடுகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்ற வரம்பற்ற இடத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

அனைத்து மனித குலத்துக்கும் சிறந்ததும் நிலையானதுமான எதிர்காலத்தை உருவாக்குவதற்காக, உண்மையான ஒத்துழைப்புடனும் தியாக மனப்பான்மையுடனும் நல்லெண்ணம் மற்றும் பரஸ்பர மரியாதையுடன் ஒன்றாகப் பணியாற்றுவோம் என்று இந்த மாபெரும் சபையில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளிடம் நான் கேட்டுக்கொள்கிறேன் என்றார். (ம)

## கெரவலப்பிட்டிய...

கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையம் தொடர்பில் இறுதி இணக்கப்பாடொன்று எட்டப்படவில்லை. இது தொடர்பில் மின் சக்தி அமைச்சர் நாட்டுக்கு உத்தியோக பூர்வமாக அறிவிப்பார்.

எனவே இது வீணாக கலவரமடையக் கூடிய காரணியல்ல என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று புதன்கிழமை இணையவழியூடாக நடைபெற்றபோது இதனைத் தெரிவித்தார்.

மேலும் கெரவலப்பிட்டிய யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் 40 வீத பங்குகளை கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையில் இலங்கை அரசாங்கத்துடன் கையொப்பமிட்டதாக அமெரிக்காவின் New Fortress நிறுவனம் நேற்று அறிவித்தது.

கொழும்புத் துறைமுகத்திற்கு அப்பாலுள்ள கடலில் இயற்கை திரவ வாயு முனையம் ஒன்றை நிர்மாணித்தல், கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையம் வரை குழாய்க் கட்டமைப்பை அமைத்தல் ஆகியன ஒப்பந்தத்தில் அடங்குவதாக அமெரிக்க நிறுவனம் நேற்று பகிரங்கப் படுத்திய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கெரவலப்பிட்டிய யுகதனவி மின் உற்பத்தி நிலையம் ஏற்கெனவே 310 மெகாவோட் கொள்ளளவை கொண்டிருப்பதுடன், 2023 ஆம் ஆண்டளவில் மேலதிகமாக 700 மெகா வோட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது. (ம)

## சர்வதேச ஒத்து...

ஐக்கிய நாடுகள் சபையின் 76ஆவது பொதுச் சபைக் கூட்டத்தொடரில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

தொற்றுப் பரவலால் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினையானது, விசேடமாக அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு மேலும் பல சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் இவ்வாறான நிலையற்ற தன்மையிலிருந்து மீள்வதற்காக, சர்வதேசப் பொறிமுறையொன்றின் ஊடாக அபிவிருத்திக்கான நிதி மற்றும் கடன் சலுகை உள்ளிட்ட மேலும் பல வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது அத்தியாவசியமாகியுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம)

## யாழில்...

வயதுடைய இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த நபர்களுக்கு தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம)

# மாணவர்களின் கல்விச் செயற்பாடு பாதிக்கப்படுவதை கருத்திற்கொள்க

## அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்களிடம் அமைச்சர் டலஸ் அழகப்பெரும

(கொழும்பு)

கல்விச்செயற்பாடுகள் முடங்கியுள்ளமையால் மாணவர்கள் எதிர்கொள்ளக்கூடிய பாதிப்புக்களைக் கருத்திற்கொண்டு செயற்படுமாறு சகல அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்களிடமும் கோரிக்கை விடுப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று புதன்கிழமை இணையவழியூடாக நடைபெற்றபோது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அதிபர், ஆசிரியர் சங்கங்களுடன் நிதி அமைச்சரும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளார். 2019 ஆம் ஆண்டு சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு இன்னமும் உயர்தர கல்வியை ஆரம்பிக்க முடியாத நிலைமை காணப்படுகிறது.

அதேபோன்று கடந்த ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கும் சிறந்த பாடசாலைகளுக்குச் செல்வதற்கான வாய்ப்புக்கள் இல்லாமற்போயுள்ளன. சாதாரண தர பரீட்சை பெறுபேறுகளையும் வெளியிட முடியாமலுள்ளது.

முரண்பாடுகள் காணப்படுகின்றமையை ஏற்றுக் கொள்கின்றோம். அதனைத் தீர்ப்பதற்கான தீர்வுகளும் வழங்கப்பட்டுள்ளன.

அந்தத் தீர்மானங்கள் போதுமானவையல்ல என்று ஒரு தரப்பினர் கூறுகின்றனர். எனினும் இதனால் மாணவர்கள் எதிர்கொள்ளக்கூடிய பாதிப்புக்களைக் கருத்திற்கொண்டு செயற்படுமாறு சகல தொழிற்சங்கங்களிடமும் கோரிக்கை விடுகின்றோம் என்றார். (ம)

# சுகாதார பாதுகாப்புடன் கட்டம் கட்டமாக பாடசாலைகளை திறக்க முடியும்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

கோவிட்-19 வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் வைரஸ் தொற்றினால் பதிவாகும் மரணங்களின் எண்ணிக்கையும் தற்போது குறைவடைந்துள்ளன.

இவ்வாறான நிலையில் பாடசாலைகளை சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கு அமைய கட்டம் கட்டமாக திறக்க முடியும் என சுகாதார அமைச்சு கல்வி அமைச்சுக்கு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

பாடசாலை மாணவர்களின் கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய இரு பிரதான விடயங்களையும் கருத்திற்கொண்டு பொறுப்புடன் செயற்படுவது அவசியமானது என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன்பிரகாரம் பாடசாலைகளை மீளத் திறத்தல் மற்றும் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்லும்விதம் தொடர்பிலான சுகாதார வழிகாட்டல் அடங்கிய பரிந்துரைகளை கல்வி அமைச்சிடம் சுகாதார அமைச்சு நேற்று கையளித்துள்ளது. (ம)

# மீன்பிடிக்கச் சென்றவர்

## வவுனியாவில் சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியா பம்பைமடு குளப்பகுதியில் மீன்பிடிக்கச் சென்றவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் மீன்பிடிப்பதற்காக நேற்றுக் காலை தனது வீட்டில் இருந்து சென்றுள்ளார்.

நீண்ட நேரமாகியும் வீடு திரும்பாத நிலையில் அவரது உறவினர்கள் குளத்துப் பகுதியில் தேடியுள்ளனர்.

இதன்போது குளக்கரையில் சடலமாக கிடந்தமை கண்டறியப்பட்டது. சிவசோதி (வயது-55) என்ற நபரே இவ்வாறு மரணமடைந்துள்ளார். (ம -299)


காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம் இரண்டாம் ஒழுங்கையில் 20 அடிப் பாதையுடன் 12 பரப்புக் காணி சட்டபூர்வமான சகல ஆவணங்களுடன் விற்பனைக்கு உண்டு.
இரண்டு (02) பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
(யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 2 Km தூரம்)
தொடர்புகொள்ளும் நேரம் :
காலை 9.00 – மாலை 6.00 மணிவரை
ஒரு பரப்பின் விலை ஆறு இலட்சம்.
[ தரகர் தேவையில்லை ]
(7499)
076 221 2037, 077 288 0152
076 734 1023

காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை வடக்கு, வீமன்காமம் (டச்சு றோட்) பகுதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(நிலை.பர 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன்)
பார்வையிடும் நேரம் : காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை.
(தரகர் தேவையில்லை)
077 814 7389
077 614 7333
[7962]

காணி விற்பனைக்கு

நீர்வேலி தெற்கு, கரந்தன் பகுதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(நிலை.பர 14 அடிப் பாதையுடன் கரந்தன் சந்தியில் இருந்து 200 மீற்றர் தூரம்)
பார்வையிடும் நேரம் : காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை.
(தரகர் தேவையில்லை)
077 814 7389
077 614 7333
[7963]


# மரண அறிவித்தல்



தோற்றம் 18 – 06 – 1967

மறைவு 22 – 09 – 2021

## ஆலாலசுந்தரம் முருகானந்தன்

( ஆசிரியர் – யா / பரியோவான் கல்லூரி )

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆலாலசுந்தரம் முருகானந்தன் நேற்று (22.09.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆலாலசுந்தரம் - திரவியம் தம்பதியரின் செல்வப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை - சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மருமகனும் மோகனலக்சுமியின் (ஆசிரியை - சென். ஜேம்ஸ் ம.வி) பாசமிகு கணவரும் கஸ்தூரியின் (மாணவி - கண்டிக்குளி மகளிர் கல்லூரி) பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான தவமணிதேவி, பாலச்சந்திரன் மற்றும் செல்வராணி, நடேசானந்தன், காலஞ்சென்றவர்களான விவேகானந்தன், புஸ்பராணி மற்றும் இந்திராணி, சரஸ்வதிதேவி, சுபத்திராதேவி, கணேசானந்தன், உருத்திரானந்தன், குமுதினி, பத்மினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் விக்கினேஸ்வரி, கருணானந்தன், சரஸ்வதி, பாலதேவி, காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரன், பத்மநாதன், கந்தசாமி மற்றும் தேவகி, சிவகலா, தவச்செல்வம், சயந்தன், கணேசமூர்த்தி, தனபாலசிங்கம், மகாலட்சுமி, விஜயலட்சுமி, லிங்கராஜா, கணேசலிங்கம், சோதிலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.09.2021) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
077 766 6684
தகவல்:-
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



மலர்வு 06 – 05 – 1949

உதிர்வு 22 – 09 – 2021

## சின்னத்துரை மகாலிங்கம் J.P

( ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் – உடற்கல்வி, தீவக வலயம் )

சுன்னாகம் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை மகாலிங்கம் நேற்று (22.09.2021) புதன்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இரத்தினம் தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான கனகசபை - கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் யோகாம்பிகையின் (சித்திரா - ஓய்வுநிலை உத்தியோகத்தர், Lanka Cement Ltd.) அன்புக் கணவரும் பிரசாந்தின் ( Sanken Constructions Pvt. Ltd.) பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சகுந்தலாதேவி மற்றும் பாலச்சந்திரன் (சந்திரன்), கருணராசன், இராஜேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கௌரி, புவனாம்பிகை, வதனாம்பிகை, மல்லிகா (Holland), சிவகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் நாளை (24.09.2021) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் வடக்கு,
சுன்னாகம்.
077 006 2051
தகவல்:-
மகன்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.5,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.